பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 17 செவ்வாய்க்கிழமை (01 - 08 - 2000) VALAMPURI ஒலி: 225

★ இனப்பிரச்சினைத்தீர்வுக்கான

# அரசியல்அமைப்பு யோசனைகளை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது

## வியாழன் அன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு அலுவலக நிருபர்)

எதிர்வரும் 3-ம் திகதி உத்தேச அரசியல் அமைப்புசீர்திருத்தமசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அங்கீகாரத்தை நேற்று ஏகமனதாக அமைச்சர்கள் வழங்கினார்கள்.

1997 ம் ஆண்டில்சீர்திருத்தநகல்திட்டத்தை அமைச்சரவைக்குஜனாதிபதி விளக்கிக்கூறினார். இதனை அடுத்து எழுந்தவாதப் பிரதிவாதங் களை மையமாக வைத்து அமைச்சர்கள் அனைவரும் தீர்வு யோசனைகளை ஏற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரிமாளிகையில் நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றைய அமைச்சரவைக் கூட்டத் திற்கு சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இக்கூட்டத்தில் அரசியல் அமைப்புச் சீர்த்திருத்தம் சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அமைச்சர்களிடம் விளக்கிக் கூறினார்.

அரசியல் அமைப்புச் சீர் திருத்தத்தை அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படுவதை அடுத்து அதற்கு அதிருப்தி வெளி யிடப்பட்ட போதும் ஜனாதி பதியின் விளக்கம் அவர்களை திருப்திப்பட வைத்ததாகத்

(8ம் பக்கம் பார்க்க)

# ஞானக்கோனுடன் பேசினால் புலி ஜனாதிபதி 'அன்ரனுடன்' பேசினால்..?

(கொழும்பு)

நான் சிங்கப்பூரில் விடு தலைப் புலி ஆதரவாளர் ஞானக்கோனுடன் பேசிய தாக என்மீது சேறு பூசும் ஜனாதிபதி சந்திரிகா அம்மை யாரை நான் நினைத்தால் அவர் மீதும் இதே சேற்றை வாரி இறைக்கவேண்டி வரும் என்று ஐ தே கட்சி தலை வர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஐ தே கட்சியின் தொடர்பு சாதன குழு கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கி ரம சிங்க மேலும் தெரிவித் திருப்பதாவது

ஜனாதிபதி சந்திரிகா அண் மையில் லண்டன் சென்றி ருந்த போது அங்கு விடு தலைப் புலிகளின் ஆதரவா ளர் அன்ரன் பாலசிங்கத்தை

# இம் மாதம் (முதல்) கூடுதல்

★ எதிர்வரும் பொதுத் தேர்தலில்

# முஸ்லிம் சம்மேளனம் போட்டி

## அமைச்சர் பௌஸி தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் முஸ்லிம் சம்மேளனம் எதிர்வரும்பொதுத்தேர்தலில் சகல மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளதாக முஸ் லிம் சம்மேளனத்தின் தலை வரும் அமைச்சருமானஏ.எச். எம். பௌஸி தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்த

(8ஆம் பக்கம் பார்க்க)

# எமது யோசனைகள் ஏற்கப்படாத தீர்வினை நாம் எதிர்ப்போம்

## முஸ்லிம்காங்கிரஸ்தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

1997ம் ஆண்டு ஒக்டோ பர் மாதத்திற்குரிய அரசாங் கத்தின் தீர்வுயோசனை களை புதிய வடிவில் ஜனா திபதி அவசரம் அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்க இருப்பது ஏனோ என்று தெரியவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும் துறைமுக அபிவிருத்தி

(8ஆம் பக்கம்பார்க்க)

★ மடுமாதா உற்சவம்

# தென்னிலங்கையில் இருந்து 15 ஆயிரம் யாத்திரிகர்கள் செல்வர்

[வவுனியா]

மன்னார் மடுமாதா ஆல யத்தின் உற்சவத்திற்கு தென் னிலங்கையில் இருந்து வரும் யாத்திரிகர்களின் நன்மை பல பூர்த்தி செய்யப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு, சிலாபம், இரத்தினபுரி, அநுராதபுரம்

(கொழும்பு)

நான் சிங்கப்பூரில் விடுதலைப் புலி ஆதரவாளர் ஞானக்சோனுடன் பேசியதாக என்மீது சேறு பூசும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரை நான் நினைத்தால் அவர் மீதும் இதே சேற்றை வாரி இறைக்கவேண்டி வரும் என்று ஐ தே கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஐ தே கட்சியின் தொடர்பு சாதன குழு கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரம சிங்க மேலும் தெரிவித்திருப்பதாவது

ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் லண்டன் சென்றிருந்த போது அங்கு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசியதாக நானும் அவர் மீது சேற்றை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இம் மாதம் முதல் கூடுதல் பயணிகள் கப்பல் சேவை

(வவுனியா)

யாழ்ப்பாணம் திருமலைக்கான பயணிகள் கப்பல் சேவையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் சேவையும் இம் மாதம் முதல் கூடுதல் சேவைகளை வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைக்கப் பலானயாவாக்கா நோயாளர் கப்பல் சேவையையும், சிற்றி

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# வவுனியா தமிழ்ப்பகுதிகளுக்கு பஸ்சேவை இல்லையெனில் 7ஆம்திகதி மறியல்போர்!

(வவுனியா)

வவுனியாவில் தமிழ்ப் பிரதேசங்களில் சகல பாதைகளுக்கும் இன்னமும் ஒரு வார காலத்துக்குள் பஸ்சேவை நடைபெறாவிட்டால் 7ஆம் திகதி திங்கட்கிழமை மறியல் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக வவுனியா பிரயாணிகள் சங்கத் தலைவர் கோ. நடேசபிள்ளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுத்திட்டத்தை எதிர்த்து லண்டனில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் கண்டுள்ள தீர்வுத் திட்டத்தை எதிர்த்து லண்டனில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா

(8ஆம் பக்கம் பார்க்க)

# நூறு மில்லியன் உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு சீனா 100மில்லியன் ரூபாவை உதவியாக வழங்க முன்வந்துள்ளது

சீனா சென்று நாடு திரும்பிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் விவசாய காணி அமைச்சருமான டி. எம். ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

# ... இருந்து 10 ஆயிரம் யாத்திரிகர்கள் செல்வர்

[வவுனியா]

மன்னார் மடுமாதா ஆலயத்தின் உற்சவத்திற்கு தென்னிலங்கையில் இருந்து வரும் யாத்திரிகர்களின் நன்மை கருதி அடிப்படை வசதிகள் பல பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு, சிலாபம், இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய இடங்களில் இருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முறைகேடுகளை விசாரிக்கக் குழு

(கொழும்பு)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எதிராக பொது மக்கள் செய்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கென குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணைக்குழு சங்கத்தின் உத்தியோக பூர்வமற்ற கொடுக்கல் வாங்கல்கள், அதிகார பூர்வமற்ற

[8ஆம் பக்கம் பார்க்க)

# சீரப் பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

குருநகரில் உள்ள யாழ். செயலக புனர்வாழ்வு களஞ்சியம் உடைக்கப்பட்டு இருடப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 37 பேரில் 29 பேர் தலா 5000/- ரூபா சரீ

(8ஆம்பக்கம் பார்க்க)

## அரசியல் அமைப்புச் சீர்திருத்த யோசனையை எதிர்த்து

# பௌத்த பீடாதிபதிகள் இணைந்து இன்று மாபெரும் பாதயாத்திரை!

[கொழும்பு]

அரசியல் அமைப்புச் சீர்திருத்த நகல் மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை எதிர்த்து இன்று பௌத்த பீடாதிபதிகள் தேசிய சேவை இளைஞர் மன்றத்தில் மாபெரும் மாநாடு ஒன்றை நடத்த உள்ளனர்.

இம்மாநாட்டில் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பௌத்தப் பிக்குகள் ஒன்று கூட உள்ளனர்.

அஸ்கிரிய பௌத்த பீடாதிபதி, புத்த ரக்ஷ தேரர், அம

[8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செஞ்சிலுவை கப்பல்சேவை விரைவில் விஸ்தரிக்கப்படும்

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால், யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையே நடாத்தப்படும் நோயாளர் கப்பல்சேவை மேலும் விஸ்தரிக்கப்பட இருக்கிறது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையேயான மேற்படி கப்பல்சேவை இன்று முதல் மாதத்தில் 5 பயணங்களை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 'திருமலைநகரம்' பயணிகள் கப்பல்சேவையும் அதிகரிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# இந்தியாவுக்கு ஆதரவு

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர அங்கத்துவம் பெறுவதற்கு வியட்நாம், கம்போடிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. (உ)

## யாழ். மத்திய கல்லூரி
## நிறுவுநர் நினைவு நிகழ்வு அழைப்பு

இடம்: யாழ். மத்திய கல்லூரி

காலம்: 01-08-2000 செவ்வாய்க்கிழமை

நிகழ்வு

1. காலை 8.00 மணிக்கு மெதடிஸ் மிஷனில் ஆராதனையும் வழிபாடும்
2. 8.30 யாழ். கோட்டை முனியப்பர் ஆலயத்தில் அர்ச்சனையும் வழிபாடும்
3. 9.00 துடுப்பாட்டம் யாழ். பரியோவான் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி (கலப்பு கலந்தடி ஆட்டம்)

★ பி. ப. 2.30 யாழ். மத்திய கல்லூரியின் புதிய கூடைப்பந்தாட்ட ஆடுகள விளையாட்டை ஆரம்பித்து வைப்பவர் திரு. க. சண்முகநாதன் (யாழ். மாவட்ட அரச அதிபரும் பழைய மாணவரும்)

★ கூடைப்பந்தாட்டம் வேம்படி மகளிர் கல்லூரி எதிர் மத்திய கல்லூரி

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் மத்திய கல்லூரி

★ பி. ப. 5 மணிக்கு ஜேம்ஸ்லிஞ் நினைவுச்சுற்றுக் கேடயமும், பரிசளிப்பும், தேனீர் விருந்தும்

குறிப்பு:- தவிர்க்க முடியாத காரணத்தினால் தனிப்பட்ட அழைப்பு வழங்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

அனைவரும் நம் அழைப்பை ஏற்று வருகை தருக.

அதிபரும் விளையாட்டு
அமைப்பும்.

[கி 682]

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம்
## தீவகம்-வேலணை

தீவக வலய பாடசாலைகளுக்கு தளபாடங்களை வழங்குவதற்கும் விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தகுதியுடைய தளபாட உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்களிடமிருந்து 2000-08-25ம் திகதி முற்பகல் 11 மணி வரை தீவக கல்வி வலயத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் நிபந்தனைகள், மாதிரிப்படங்கள் ஆகியவற்றை கேள்விப்பத்திரக் கட்டணமான ரூபா 200/- வும் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக ரூபா 2000/- மும் ஆக மொத்தம் 2200/- ஐ வங்கிக் கட்டளை மூலம் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினை பெற்று அதனை இத்திணைக்களத்தின் களஞ்சியக் கிளையில் சமர்ப்பித்து 2000-08-11ம் திகதி முற்பகல் 11மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம். வங்கிக் கட்டளை ''வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம்'' என்ற பெயருக்கு பெறப்படல் வேண்டும்.

### தேவையான தளபாட விபரம்

1. கைப்பிடிக் கதிரை
2. மாணவர் மேசை ஏ
3. மாணவர் கதிரை ஏ1

வலயக்கல்விப்பணிப்பாளர்
(திரு. ப. விக்னேஸ்வரன்)

[கி/684]

# ஆடிப்பூரத் திருவிழா

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடிப்பூர நாவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று ஆரம்பமாகிறது. (உ-59)

★ ★ ★

யாழ்ப்பாண அருள்மிகு நல்லூர் கைலாசநாத சுவாமி கோயில் ஆடிப்பூரத்திருவிழா நாளை காலை நடைபெறும்.

நாளை மறுநாள் 3 ஆம் திகதி வியாழக்கிழமைசனி பெயர்ச்சியை முன்னிட்டு விசேடயாகபூசை இடம்பெறும் (த-106

★ ★ ★

(அரியாலை)

காரைநகர் அருள்மிகு ஈழத்துச் சிதம்பரத்தின் வருடாந்த தேவிஉற்சவ தேர்த்திருவிழா இன்றுகாலை 10 மணிக்கு நடைபெறும்.

நாளை புதன் காலை 10 மணிக்கு தீர்த்தஉற்சவத்துடன் உற்சவம் முற்றுப்பெறும். (த-106)

★ ★ ★

(அரியாலை)

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன்கோயில் தேவிஉற்சவ தேர்த்திருவிழா இன்றுகாலை 9.30 மணிக்கு நிகழும்.

நாளை புதன் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு திருவூஞ்சல் நடைபெறும். (த-106)

★ ★ ★

(அரியாலை)

அருள்மிகு ஸ்ரீ சட்டநாதர் ஆலய வருடாந்த அம்மன் உற்சவ தேர்த்திருவிழாவும் நாளை 2ம் திகதி காலை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (த-106)

★ ★ ★

(இணுவில்)

உடுவில்கிழக்கு அருள்மிகு கற்பகப்பிள்ளையார் கோயில் உற்சவம் இம்மாதம் 04 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 14 ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (த-49)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம்- அரசடி வீதி, அருள்மிகு செல்வநாக பூஷணி அம்மாள் ஆடிப்பூரத் திருவிழா நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (த)

# புதிய அட்டைகள் வழங்கல்

(மண்டைதீவு)

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகத்தில் குடும்ப அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு புதிய அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது யாழ்ப்பாணத்தில் இருந்து தற்பொழுது இடம்பெயர்ந்து தீவுப்பகுதியில் குடியிருப்பவர்களுக்கும் புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

# நல்லூரில் பந்தல் அமைப்பு வெகு மும்முரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆரம்பமாக உள்ள நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு பந்தல்கள் அமைக்கும்பணி தற்சமயம் நடைபெற்றுவருகின்றது.

இம் முறை நடைபெறும் உற்சவத்தை எளிமையான முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் குறித்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ் மாநகர சபை ஆணையாளர் வே.பொ பாலசிங்கம் தலைமையில் மின்சாரசபை அதிகாரிகள், போக்குவரத்து சபை அதிகாரிகள், ஜிரிசற் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (க-3)

# மின் விநியோக நேரத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

(மண்டைதீவு)

வேலணைப் பகுதிக்கான மின்சார விநியோகநேரத்தை அதிகரிக்குமாறு மின்சாரசபையின் வட பிராந்திய முகாமையாளரிடம் வேலணைபிரதேச சபைத்தலைவர் ந.கருணாகர குருமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார். அக் கோரிக்கையில் வேலணைப்பகுதியில் அதிகாலை 6 30மணியுடன் நிறுத்தப்படும் மின் விநியோகத்தினை 2.30மணிவரை நீடிக்குமாறு கோரி உள்ளார்.

இதன் மூலம் அரச அலுவலகங்களும் அரசாங்க வைத்திய சாலையும் காலதாமதங்கள் இன்றி செயற்படமுடியும் என்று தெரிவித்துள்ளார். தற்போது மின்சாரம் மாலை 7 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரையும் காலை 5 மணிதொடக்கம் 6.30 மணி வரையுமே விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (க)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

ஊர்காவற்றுறை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனத்தின்வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 29-07-2000 அன்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் J X. செல்வநாயகம் அவர்களின் முன்னிலையில் சம்மேளனத் தலைவர் செல்வன் தி. ஞா. செந்தமிழ்செல்வன் தலைமையில் இடம் பெற்றது.

1ம் பரிசுக்குரிய இல: 0322
2ம் பரிசுக்குரிய இல: 0409
3ம் பரிசுக்குரிய இல: 1310

10 ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1730 | 2710 | 2560 | 1480 | 2991 |
| 1054 | 1704 | 2651 | 1631 | 2097 |

மேற்படி இலக்கப் பற்றுச்சீட்டினை உடையவர்கள் எதிர்வரும் 15-08-2000 திகதிக்கு முன் இளைஞர் கழகங்களில் ஊர்காவற்றுறைப் பிரதேச சம்மேளனத் தலைவருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தி. ஞா. செந்தமிழ்செல்வன்
தலைவர்

இளைஞர் கழகங்களின்,
பிரதேச சம்மேளனம்,
ஊர்காவற்றுறை.

(கி/683)

## பிரிவுத் துயரில்
## மூன்றாவது ஆண்டு நினைவு



இன்பம்: 1955-02-26 துன்பம்: 1997-08-01

அமரர் ஆர்.வி எஸ். திருநாவுக்கரசு
[ஆசிரியர்]

''உன்பணி எம்மை விட்டு பிரிந்து விட்டது
உன் பணியின் மேன்மை எம்முடன் இணைந்து விட்டது''

நெடுந்தீவு மரநாட்டு இயக்கம்
நெடுந்தீவு கிழக்குச் சனசமூக நிலையம்
நெடுந்தீவு ஐக்கிய தீப சன சமூக நிலையம்
நெடுந்தீவு மேற்கு சன சமூக நிலையம்
நெடுந்தீவு மேற்கு வளர்மதி சனசமூக நிலையம்
ஆர்.வி.எஸ். திருநாவுக்கரசு கல்வி புலமைப் பரிசில் நிதியம்.

(கி-681)

# சங்கேமுழங்கு

## வழிபடும் உரிமைக்கு வசதி செய்க

நல்லை நகர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தில் கலந்துகொள்ளும் கந்தப்பெருமான் அடியார்கள் எதுவித இடர்பாடுகளுக்கும், தடைகளுக்கும் முகம் கொடுக்காமல் தத்தம நேர்த்திக் கடன்களைப் பக்தி பூர்வமாக நிறைவேற்ற ஏற்புடைத்தான சகல வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்பதில் இரண்டு விதமான கருத்துகளுக்கு இடம் இருக்காது என எண்ணுகின்றேன்.

அந்தவகையில் குறிப்பிட்ட மஹோற்சவ காலத்தில் கற்பூரச் சட்டி எடுப்பவர், பிரதட்டை செய்பவர், காவடி எடுப்பவர் எனப் பலதரப்பட்ட கணக்கிட முடியாத அடியார்களைத் திருமட விளாகத்தில் தரிசிக்க முடியும் - காணக் கூடியதாக இருக்கும்.

அத்தகைய முருகன் அடியார்கள் சன நெருக்கடி மிகுதியால் தமது நேர்த்திக் கடன்களை மனத்தை ஒருநிலைப்படுத்தி சுயாதீனமாகவும், பக்தி சிரத்தையுடன் ஒழுங்காகவும் செய்யமுடியாமல் திண்டாடுவதை திணறுவதை நாம் கண்ணாரக் காண்கின்றோம் கவலைப்படுகின்றோம், கண்ணீர் உதிர்க்கின்றோம்.

இளமட்டங்களின் சேஷ்டைகளுக்கு இலக்காகுதலும் கண்கூடு, குளிக்கப்போய் சேற்றைப் பூசிய நிலையில் எம் பெருமான் அடியார்கள்.

சமகாலத்தில் நிலவும் அசாதாரண சூழ் நிலைகூட அவர்களை மேன்மேலும் அச்சுறுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தமக்குள்ள மிகப் பெரிய கடன்.

ஆகவே முருகக் கடவுளின் அடியார்கள் தத்தம் நேர்த்திக் கடன்களைப் பயபக்தியுடன் பூர்த்தி செய்வதற்கு வசதியானதும், பொருத்தமானதுமான ஓர் இடத்தைஒதுக்கிக் கொடுப்பது முக்கியமான கருமமே.

திருக்கோயிலைச் சூழவுள்ள பெருமதியின் எதிர்ப்புறமாக அதன் அருகில் மடவளாகத்தின் நாற்பக்கமும் 10அடி அகலமாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ இடம் ஒதுக்கி, அதனை எல்லைப்படுத்தித், தனிமைப்படுத்திக் கொடுப்பின் அவர்கள் எதுவித இடைஞ்சல்களுக்கும் உள்ளாகாமல் அதனூடாகப் பிரவேசித்து தத்தம் நேர்த்திக் கடன்களை மிகச் சிறப்பாக நிறைவு செய்து கொள்ள பேருதவியாக இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

(அரியாலை) மோ. ஷாந்தன் சத்தியகீர்த்தி

## சம்பள உயர்வு குறித்து தொழில் அமைச்சர் பேச்சு

தோட்டத் தொழிலாளர்களுடைய மாதாந்த ஊதியத்தினை 400 ரூபாவினால் அதிகரிப்பது தொடர்பாக தொழிலமைச்சர் டி. செனவிரத்ன, ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

தனியார் துறையினர்க்கான 400 ரூபா சம்பள அதிகரிப்பு அறிவிப்பினையடுத்து, தோட்டத்தொழிலாளர்களுக்கும் அவ் அதிகரிப்பு வழங்கப்படுவது குறித்து அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதேசமயம்;

தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பளங்கள் அண்மையிலேயே அதிகரிக்கப்பட்டமையினால் இவ் அதிகரிப்புக் கோரிக்கை சாத்தியப்படாதென தோட்ட உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## போராட்டம் ஒத்திவைப்பு பேச்சுவார்த்தையை அடுத்து முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டவேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தால் இன்று 1ஆம்திகதி நடத்தப்படவிருந்தபோராட்டமானது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேற்படி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

எமதுபிரதிநிதிகள் அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான கௌரவ டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகியஜெகன் ஆகியோருடன் மேற்கொண்ட சந்திப்பின் போது அவர்களால் வழங்கப்பட்ட உறுதியுரைகளையடுத்துதற்காலிகமாகக்கைவிடப்பட்டுள்ளது. எனதெரிவித்துள்ளனர். (க)

## யாழ். பல்கலை பௌதீக விஞ்ஞான பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பௌதிக சிறப்புக் கற்கை நெறியில் 1996 ஆம் 1997 ஆம் கல்வியாண்டின் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகியது.

மேற்படி கல்வி நெறியில் 1996 ஆம் கல்வியாண்டில் பி.சங்கர் இரண்டாம் வகுப்பு மேற் பிரிவிலும், என்.சுரேஷ் சாதாரண பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

1997 ஆம் கல்வியாண்டில் இரண்டாம் வகுப்பு மேற் பிரிவில் பி.தயாபரன், செல்வி வை. வேல்முருகு ஆகியோரும். செல்வி எம். சின்னத்தம்பி, எஸ். அரவிந்தன், என். ராஜ்குமார், எஸ். சசிந்தன், பி. உருத்திரன் ஆகியோர் சாதாரண பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை பௌதிகத்திற்கான அருணாசலம் மகாதேவர் ஞாபகார்த்த சிறப்புப் பரிசினை பி. சங்கர் பி. தயாபரன் ஆகியோர் பெற்றுக் கொள்ள இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ந-3)

# ஆலய சூழலில் மது விற்பனை

# அடிதடிகளுக்கும் குறைவில்லை

## இணுவிலில் சம்பவம்

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு அண்மையில், சட்ட விரோத மதுவிற்பனை இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடலில் காலை மாலை இரு வேளைகளிலும் ''பெரும் குடிமக்கள்'' பெருமளவில் கூடி நிற்பதாகவும்,

அடி, பீடி, வாய்ச்சண்டைகளில் ஈடுபட்டு ஆலயத்தின் அமைதிச் சூழலிற்கு பங்கம் ஏற்படுத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால், ஆலயத்திற்கு தெய்வ தரிசனத்திற்காகச் செல்வோர் பெரும் இடையூறுகளைச் சந்தித்து வருவதாகவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அவ் வழியால் பிரயாணம் செய்வோர் மற்றும் அச்சூழலில் வாழ்வோரும் பெரும் அதிருப்தியினை வெளியிட்டுள்ளனர்.

அமைதியையும், அன்பையும் வளர்க்க வேண்டிய ஆலய சூழலில் இவ்வாறான அடிதடிகள் இடம் பெறுவது ஏற்றதல்ல என பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-49)

## நாளை செஞ்சிலுவை கப்பல் வருகை

[யாழ்ப்பாணம்]

யாழ்குடா நாட்டுக்கான செஞ்சிலுவைச் சங்க நோயாளர் கப்பல் நாளை புதன் கிழமை திருமலையிலிருந்து பருத்தித்துறைக்கு புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால் பொதிகளும் எடுத்து வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-3)

## வெற்றிலைச் செடி பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

அண்மைக்காலமாக நிலவி வரும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் வெற்றிலைச் செய்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் கடும் வெப்பச் சூழ் நிலையில், மண்ணெண்ணெய் இன்மையால் செடிகளிற்கு நீர் பாய்ச்ச முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் வெற்றிலைகள் புள்ளி விழுந்தும், இலை சுருள் நோய்க்கு உள்ளாகியும் காணப்படுகின்றன.

இந் நிலைமையால் விவசாயிகளும்பாவனையாளர்களும் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். (த-12)

## சிரமதானப் பணி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் சின்னமடு தேவாலய வருடாந்த நவநாளினை முன்னிட்டு ஆலயவளாகத்தில் அண்மையில் சிரமதானப் பணி இடம் பெற்றது.

மேற்படி சிரமதானப்பணியில் பிரதேச கழகங்களின் சம்மேளன அங்கத்தவர்கள் பலரும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர் பலரும் கலந்து கொண்டனர். (த-79)

## விரைவில் மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புதிதாக மின்னிணைப்பு வழங்கப்பட்டவர்களுக்கு, கொழும்பில் இருந்து புதிய மின் மாற்றிகள் வந்து சேர்ந்ததும் மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஏற்கனவே பாவனையில் இருந்து பழுதடைந்த மின்மாற்றிகள், திருத்தம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## உடன் தொடர்பு கொள்க

(ஊர்காவற்றுறை)

திவுப்பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களையும், நியமனம் இடைக்காத தொண்டராசிரியர்களையும் இன்று காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தெரிவித்துள்ளார். (த-75)

## சடலம் தோண்டி எடுப்பு மரணத்தில் சந்தேகமாம்

(கொழும்பு)

பதினைந்து வயது இளம் பௌத்த துறவியான சோமசேனாவின் உடல், புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டு மேலதிகப் பரிசோதனைகளுக்காக ருகுண பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த வைகாசி மாதம் வெசாக் தினத்தன்று தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கருதப்பட்ட பௌத்த துறவியின் மரணத்தில் எழுந்த சந்தேகங்களை அடுத்தே மீண்டும் உடல் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான்இதுதொடர்பானவிசாரணைகளை நடத்தி உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை,

தோண்டி எடுக்கப்பட்ட இளம் துறவியின் சடலத்தில் சில அவயவங்கள் காணாமல் போயிருப்பதாகவும், இதனால் மரணத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது சிரமம் எனவும் ருகுண பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ)

## தமது செயலை நியாயப்படுத்தும் திருடர்; மக்கள் விசனம்

(ஈச்சமோட்டை)

திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற சினிமாவசனத்திற்குஒப்பதிருட்டுத் தொழிலையும் நியாயப்படுத்தும் வகையில் திருடர் சிலர் செயற்படுகின்றனராம்.

ஆட்களற்ற வீடுகளில் தமது கைவரிசையை காட்டி வரும் திருட்டு நபர்கள் தட்டிக்கேட்பவர்களிடம் தமது செயலை நியாயப்படுத்துவதுடன் சண்டித்தனம் புரிந்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

அண்மையில் ஈச்சமோட்டை சண்டுக்குளிப் பகுதிகளில் தேங்காய் திருடிய சிலரை வழிமறித்து விசாரித்த போது ஆட்களற்ற வீடுகளில் பொருட்களை எடுப்பது களவல்ல என நியாயப்படுத்த முயன்றனராம்.

அதையும் மீறி அவர்களது முயற்சியை முறியடிக்க முயன்ற வேளை ''எங்கே முடிந்தால் எங்களைத்தடுத்து நிறுத்துங்கள் பார்க்கலாம்'' என சண்டித்தனம் புரிந்ததுடன்;

நாம் களவுதான் எடுக்கிறோம் அதனைத் தட்டிக் கேட்க நீங்கள்? யார் எனஎதிர் வாதம் புரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிலைமை தொடர்ந்தால் மக்களைக் கண்டு கள்வர் ஒழிந்தோடிய காலம் போய் கள்வரைக் கண்டு மக்கள் ஒழிந்தோடிய காலம் வரும் எனவும் பொது மக்கள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (உ-59)

## வாலாம்பிகையே; வருக

வண்ணைநகர் வாலாம்பிகை தேரேறி வருக
வையகத்தில் வாழ்வருளும் தையலம்மா வருக
வளமுடன் நம் இனம் வாழவே தேரேறி வருக
சொல்லியழும் அடியார்கள் துயர் தீர்க்க வருக
சுந்தரத் தமிழர் விடிவுகாண தேரேறி வருக
தூய திருமுறைகள் ஒலிக்கவே தேரேறி வருக

(வண்ணை வாலாம்பிகா வைத்தீஸ்வர ஆலய ரதோற்சவத்தை முன்னிட்டு இன்றுஇக் கவிதை பிரசுரமாகின்றது)

-வேலணை பாலா-

சக்திதுணை

## தேரேறும் மகமாரி

வண்ண ரதம் ஏறி வரும் எங்கள் மகமாரி
வடம் பிடிக்க ஆண்களுமே பெண்களுமே வாரீர்
வரும் துயர்கள் அத்தனையும் துவண்டு விடும் பாரீர்
எங்கள் மாரியவள் அருளுடைய அடியவரே கேளீர்
(கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலய தேர்த் திருவிழாவை யொட்டி இக் கவிதை பிரசுரமாகின்றது)

-அடிச்சேரியான்-

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

சிறந்த ஒழுக்கமுள்ள

# சமுதாயத்தை உருவாக்குவதே

# சமய போதனையின் தாற்பரியம்

(யாழ்ப்பாணம்)

பரந்த நோக்கமும் உயர் மனப்பாங்கும், இரங்கும் அருள் நெறியும், சிறந்த ஒழுக்கமும், தெளிந்த அறிவும் முதியோரை மதிக்கும் நற்பண்பும் உள்ளவராக மானிட சமூகத்தை உருவாக்குவதே சமய பாடப் போதனையின் நோக்கமாக அமைய வேண்டும்.

ஓய்வு பெற்ற அதிபர் கா. கணேசதாசன் உடுவில் மூருகமூர்த்தி வித்தியாலய மாணவர்களால் நடாத்தப் பட்ட பிரார்த்தனை வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'கிடைத்தற் கரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் வாழ் நாட்களை வீணாக்காது வாழப்பழக வேண்டும். இதற்கு துணை புரிவது தெய்வ நினைப்பே. மானிட வாழ்வு வளம் பெற வேண்டுமெனில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் ஏற்பட வேண்டும்.

எல்லோரையும் மண்ணுலகிலிருந்து விண்ணுலகிற்கு அனுப்புவதே பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கும் நோக்கமாக அமையக் கூடாது.

சமய வாழ்வுதான் மனிதன் வாழ வேண்டிய வாழ்வு என்பதை மாணவர் நன்கு உணர வேண்டும். தனது குற்றங்களை தானே உணர்ந்து திருந்திக் கொள்ள நற்சான்று பகர்வது சமய அனுபவம். கல்விச் செல்வத்தையோ, பொருட் செல்வத்தையோ, பெற்றவர்கள் தற்பெருமையும், பொறாமையும் செருக்கும் அடையக் கூடாது.

நீதியும், அறமும் ஒழுக்கமும் கூடிய இளைஞர்களே இன்று நமது தமிழ் இனத்திற்குத்தேவைப்படுகின்றனர்.

மாணவர்களுக்கு குருபக்தி மிகவும் அவசியம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம் செய்து 'கற்றபின் நிற்க' என்ற வாக்கிற்கமைய மாணவர் சமூகம்எதிர் காலத்தில் வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன் என்றார்.

மாணவ, மாணவிகளின் கூட்டுவழிபாடும், பண்ணிசை நிகழ்வுகளும் நடைபெற்றன.

(க)

## யாழ். கோட்ட மட்டப் போட்டியில் சிறந்த தகமைகளை பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 6 ஆம் 7 ஆம் திகதிகளில் யாழ். கோட்ட மட்டத்தில் தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குபற்றி, முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

பிரிவு ஒன்றில் வாசிப்புநிகழ்வில் எலாயன்றிதுவாஸ்யாழ். புனித பரியோவன் கல்லூரி, வை. தர்மஜா யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், லூ. டினலலா யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஆக்கத்திறன் வெளிப்பாடு கதை கூறல் நிகழ்ச்சியில் த.டனிஹம்சானந்யாழ்புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், இ. தர்மிளா யாழ். பாஷையூர் சென். அன்ரனீஸ் மகளிர் பாடசாலை, பா. சர்மிளா யாழ். சன்மார்க் மகா வித்தியாலயம்.

ஆக்கம்- எழுத்து நிகழ்ச்சியில் க. திவாகர் யாழ். புனித பரியோவான் கல்லூரி, வ. ஹர்சி யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், க. சக்திநாயகி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

பேச்சு நிகழ்வில் க.ஜோனி மல்ராஜ் யாழ். புனிதபரியோவான் கல்லூரி ப. உபேந்திரா யாழ். புனித ஜோன் பொஸ்கோதி சிந்துஜன்யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி,

பாவோதல் நிகழ்வில் க. பாலமுரளி யாழ். புனித பரியோவான் கல்லூரி, ஞா. சங்கீதா யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ம. நியூட்ஷாந் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி.

இசையும்- அசைவும் நிகழ்வில் ர.சுரசாஹிந்தியன் யாழ் புனித பரியோவான் கல்லூரி அ. பெக்லிமேரி யாழ். புனித ஜோன் பொஸ்கோ, இ. தாரணியாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்.

(தொடரும்) (க)

## விறகு இன்மையால் இடம்பெயர்ந்தோர் அவலம்

(தென்மராட்சி)

வலிகாமம் வடமராட்சி பிரதேசங்களில் தஞ்சமடைந்திருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் தமது சமையல் தேவைகளுக்கு விறகு வகைகள் இல்லாமையினால்பெரும் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றன.

இப்பிரதேசங்களில் காணப்படுகின்ற வெற்றுக் காணிகளில் இருந்த சுள்ளி விறகுகள் யாவற்றையும் பயன்படுத்தி முடிந்துள்ளதால் சிலகுடும்பத்தலைவர்கள் வீதியோரங்களில் உள்ள பட்ட மரங்களையும், மரங்களின் அடிப்பாகத்தையும் வெட்டி வருகின்றனர்.

அதேவேளை விறகுகாலைகளில் விறகுகள் ஒரு தூக்கு 250ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து தென்னை மட்டைகளை விறகு விற்பனைசெய்வோரும் விற்று வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

ஆயினும், சாதாரண குடும்பத்தவர்கள் பணம் செலுத்தி விறகினைக் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-77)

நல்லூர் தேர்தல் தொகுதியில்,

## நூறு வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

தேர்தல் தொகுதிகள் தோறும் நூறு வீடுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ், நல்லூர் தேர்தல் தொகுதிக்கு அனுப்பப்பட்ட நிதி பயன்படுத்தப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி நிதியினைக் கொண்டு வீடமைக்கும் பணியினை, ஏனைய தேர்தல் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், நல்லூர் தேர்தல் தொகுதிக்கு வீடமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட வில்லை.

இது விடயம் தொடர்பாக நல்லூர் பிரதேசசபைத் தலைவர் மணிபல்லவராஜன் (நிஸாந்தன்) யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டதை அடுத்து வீடமைப்பதற்குத் தேவையான நிதியினை பயன்படுத்துவதற்கு அரச அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளார்

(உ-3)

## களுத்துறையில் பஸ் - மினி வான் விபத்து 8 பேர் பலி; 25 பேர் காயம்

(கொழும்பு)

களுத்துறை, காலி வீதியில் அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தில் எட்டுப் பொதுமக்கள் பலியாகினர். இருபத்தைந்து பேர் காயமடைந்தனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்சும் தனியார் மினிவானும் மோதிக்கொண்டதிலேயே இத்துயரச்சம்பவம் இடம்பெற்றது.

விபத்தால் காயமடைந்தவர்கள் பாணந்துறை ஆதார வைத்தியசாலையிலும், கொழும்பு ஆதார வைத்தியசாலையிலும் அனுதிக்கப்பட்டுள்ளர். [ந - 7]

## 46 பேருக்கு அனுமதி

[வவுனியா]

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இடம்பெயர்ந்தோர் தொடர்பான சிபார்சு குழு, வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்த 15 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேரை நிலையத்தை விட்டு வெளியிடங்களில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது,

ஜனாதிபதியின் சிபார்சுக் குழுவில் பிரிகேடியர் பி.எஸ். சோம, லெப். கேணல் கிப்ஸ் சிறி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தயானந்த பண்டாரவ, வுனியா அரச அதிபர் கே. கணேஸ், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வவுனியா செயலாளர்புனிதசிங்கமூர்த்தி ஆகியோர் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது, [ந.7]

## வட்டுக் கோட்டையில் திருட்டு வீட்டு வேலியை வெட்டி இடம்பெற்றதாம்

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டை டச்சு வீதிப் பகுதியிலமைந்துள்ள வீடொன்றில் கடந்த 30 ஆம் திகதி துணிகரத் திருட்டொன்று இடம்பெற்றுள்ளது

சம்பவம்பற்றி தெரியவருவதாவது இரவு வீட்டுஉரிமையாளர்கள் தூங்கிக்கொண்டிருந்தவேளையில் வீட்டு வேலியைவெட்டி புதிய பாதையொன்றை அமைத்து அதனூடாக வளவினுள் உள்நுளைந்து பெறுமதிமிக்க மோட்டார்சைக்கிள் ஒன்றையும் இன்னுமோர் பெண்கள் துவிச்சக்கரவண்டியையும் சாதுரியமாகத் திருடிச்சென்றுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள்பல தொடராக வட்டுக்கோட்டைப்பகுதியில் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் வட்டுக் கோட்டையில் திருட்டுச்சம்பவம்ஒன்று ஊரவர்களால் முறியடிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்டோர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-59)

## 46 பேருக்கு அனுமதி

(வவுனியா)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இடம்பெயர்ந்தோர் தொடர்பான சிபார்சுக்குழு வவுனியா நலன்புரிநிலையங்களில்தங்கியிருந்த 15 குடும்பங்களைச்சேர்ந்த 46 பேரை

மட்டக்களப்பில்

இப்பிரதேசங்களில் காணப்படுகின்ற வெற்றுக் காணிகளில் இருந்த சுள்ளி விறகுகள் யாவற்றையும் பயன்படுத்தி முடிந்துள்ளதால் சிலகுடும்பத் தலைவர்கள் வீதியோரங்களில் உள்ள பட்ட மரங்களையும், மரங்களின் அடிப்பாகத்தையும் வெட்டி வருகின்ற விற்று வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

ஆயினும், சாதாரண குடும்பத்தவர்கள் பணம் செலுத்தி விறகினைக் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-77)

## மட்டக்களப்பில்

# முறைகேடான நியமனம் தொண்டராசிரியர் பதவி நீக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் சுட்டிக்காட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உயர் மட்ட விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர்களின் பெயர்களை பட்டியலிலிருந்து நீக்கிவிட்டு இரண்டாவது பட்டியலிலுள்ள தொண்டராசிரியர்களை சேவைக்கால அடிப்படையில் தெரிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்குக்-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் எம்.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் கல்குடா வலயத்திலிருந்து அதிகமுறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இதேபோன்ற விசாரணைகள் வன்னிப்பகுதியிலும் திருகோணமலையிலும் இடம் பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந)

# சேவைக் கட்டணங்கள் குறைவு கூட்டுறவு சங்கங்களின் அதிருப்தி

(தென்மராட்சி)

அரசினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருட்களுக்கான சேவைக்கட்டணங்கள் போதாமல் இருப்பதாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதுவிடயத்தில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்களுக்குபோதிய லாபம் கிட்டாமல் இருப்பது பற்றியும், தெரிவித்த தலைவர்கள் சங்கங்கள் ஆட்டமடையாமல் பொதுமக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமாயின் சேவைக்கட்டணம் அதிகரித்து வழங்கப்படல் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் அறியப்படுகின்றது. (க77)

# 46 பேருக்கு அனுமதி

(வவுனியா)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இடம்பெயர்ந்தோர் தொடர்பான சிபார்சுக்குழு வவுனியா நலன்புரிநிலையங்களில்தங்கியிருந்த 15 குடும்பங்களைச்சேர்ந்த 46 பேரை நிலையத்தைவிட்டு வெளியேறி வெளியிடங்களில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் சிபார்சுக் குழுவில் பிரிகேடியர் பி. எஸ். சோம லெப்கேணல் கிப்ஸ்சிறிசிரேஸ்ரபொலிஸ் அத்தியட்சகர் தயானந்த பண்டார, வவுனியாஅரசு அதிபர் கே. கணேஸ், தமிழர்விடுதலைக் கூட்டணியின் வவுனியா செயலாளர் புனித சிங்கமூர்த்தி ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

(தென்மராட்சி

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர்களின் தனியார் கோவைகள் இல்லாமை காரணமாக அவர்களுக்கு நடாத்தப்படவிருந்த கிராம சேவையாளர் தரம் 1 க்கான நேர்முகப் பரீட்சை மறுத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தமது தனியார்க் கோவைகள் எடுக்கப்படாமை குறித்து கிராம சேவையாளர் மத்தியில் பெரும் அதிருப்தியும் கவலையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (க-77)

தாவது இரவு வீட்டுஉரிமையாளர்கள் தூங்கிக்கொண்டிருந்தவேளையில் வீட்டு வேலியைவெட்டி புதிய பாதையொன்றை அமைத்து அதனூடாக வளவினுள் உள் நுளைந்து பெறுமதிமிக்க மோட்டார்சைக்கிள் ஒன்றையும் இன்னுமோர் பெண்கள் துவிச்சக்கரவண்டியையும் சாதுரியமாகத் திருடிச்சென்றுள்ளனர்.

இவ்வாறான திருட்டுச்சம்பவம் கோட்டையில் திருட்டுச்சம்பவம்ஒன்று ஊரவர்களால் முறியடிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்டோர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-59)

# நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண சனசமூக நிலையத்தினர், அண்மைக்காலமாக தமது கிராம முன்னேற்றத்திற்காக ஈ.பி.டி.பி. அமைப்பினர் புரிந்த உதவிகளுக்கு நன்றி தெரிவித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

(உ-3)

# வேலணையிலும் ஆடி அமாவாசை

(மண்டைதீவு)

ஆடி அமாவாசை தினமான நேற்று முன்தினம் வேலணை வெள்ளைக் கடற்கரை புனித தீர்த்தத்தில் பக்தர்கள் பலர் பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர். பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான அறங்காவல் சபையின் ஏற்பாட்டில் ஆலய முதன்மைக் குரு புனித தீர்த்தக் கரையில் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்குரியகிரியைகளை நடைமுறைப்படுத்தினார். (க)

---

# மேலும் ஐவருக்கு ஆசிரியநியமனம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, அட்டாளைச் சேனை, மடடக்களப்பு கல்வியியல் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்ற மேலும் ஐவருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

கணிதம், ஆங்கிலத் துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கே இந்நியமனம் வழங்கப்பட உள்ளது.

இவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

எஸ்.மஞ்சுளா, (கணிதம்) பல்கலைக்கழக வீதி திருநெல்வேலிவடக்கு யாழ்ப்பாணம்.

எஸ்.சிவசாந்தினி (கணிதம்) வெள்ளம் போக்கடி கொடிகாமம்.

எஸ். தயாளினி, (கணிதம்) பெரிய ஆரசடிவீதி, சங்கத்தானை சாவகச்சேரி.

எஸ். ஸ்ரீகாந்தன், (ஆங்கிலம்) உசன்மிருசுவில்யாழ்ப்பாணம்

ஏ. மைதிலி, (ஆங்கிலம்) ஏ.எஸ் 1/2மனிங்டவுன்அல்லிடிகளமாவத்தை கொழும்பு

[த-08]

## இன்று ஒரு தகவல்

# வாழ்வெனும் காட்டில் கல்லுக்குள் ஈரம்

செல்வந்தர் ஒருவரிற்கு நீண்ட காலமாக ஒரு ஆசை. தேச சஞ்சாரம செய்ய வேண்டும் என்பதே அது. நீண்ட கால ஆசை நிறைவேறும் காலமும் வந்தது. செல்வந்தர் காட்டுவழியாகப் பிரயாணம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து தன்னந் தனியாக புறப்பட்டுவிட்டார் பிரயாணம் செய்வதற்கான அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றையும் வழிச் செலவிற்கான பணம் என்பவற்றையும் எடுத்துக் கொண்டு பயணம் செய்யத் தொடங்கினார்.

அவர் பயணம் செய்த வழி அடர்ந்த காட்டுப் பிரதேசம். அதன் வழியே போய்க் கொண்டு இருந்தார்.

அது மக்கள் நடமாட்டம் இல்லாத காட்டுப் பிரதேசமாகையால் அங்கு திருடர் தமது கைவரிசையைக் காட்டத் தவறுவதில்லை.

செல்வந்தருக்கும் இது தெரியும். திருடர் பயம் காரணமாக அவரும் தமது உடமைகளைக் கவனமாக பல தடவை பார்த்துக் கொண்டார். அடர்ந்த காட்டுப் பாதையில் பல ஒற்றையடிப் பாதைகள் வழியாக செல்வந்தர் சென்று கொண்டிருந்தார். காட்டுவழி நீண்டது. எனவே இடையிடையே மர நிழல்களில் தங்கி இளைப்பாறிய பின் நடந்து செல்வது அவரது வழக்கமாக இருந்தது.

இவ்வாறு அவர் சென்று கொண்டிருந்த போது மூன்று திருடர்களிடம் அவர் அகப்பட்டுக் கொண்டார். வழி மறித்த திருடர்கள் சும்மா இருப்பார்களா? மூன்று திருடர்களும் அந்தச் செல்வந்தரை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் என்ன வைத்திருக்கிறாய்... மரியாதையாக இருப்பதை எடுத்துக் கொடுத்து விடு என்று மிரட்டினர் செல்வந்தர் நடு நடுங்கிப் போனார் அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பலவாறாகக் கெஞ்சினார். திருடர்கள் தமக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவ விடுவார்களா? அவர்கள் செல்

முடிவிற்கு வந்தனர். செல்வந்தரைக் கொல்லாமல் கையையும்,காலையும் கட்டிவிட்டுப் போவது எனத் திருடர்கள் தீர்மானித்தனர். அதன்படி செல்வந்தரின் கையையும் காலையும் கயிறொன்றினால் இறுக்கிக் கட்டினர்.

அதன்பின் சாலை ஓரமாக அந்த ஆளைத் தூக்கிப் போட்டுவிட்டு போனார்கள். நேரம் போய்க் கொண்டிருந்தது திருடர்களில் ஒருவன் இரக்க சுபாவம் கொண்டவன் சாலை ஓரமாக செல்வந்தனைக் கட்டிப்போட்ட செயலிற்காக இரக்கப்பட்டான்.

அவன் செல்வந்தரை நோக்கி வந்தான். ''ஐயோ பாவம் உனக்கு வலிக்குதா?'' என்று கேட்டான். கொஞ்சம் இரு இந்தக் கட்டையெல்லாம் அவிழ்த்து விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டே மெதுவாகக் கட்டுக்களை அவிழ்க்கத் தொடங்கினான். செல்வந்தரின் கட்டுக்களை அவிழ்த்து அவரை விடுவித்தான் அதன்பின் ''என்னோடே வா உனக்கு வழி காட்டுகிறேன் என்று சொல்லி அந்தத் திருடன் செல்வந்தரை தன்னுடன் அழைத்துச் செல்வதற்கு கூப்பிட்டான்.

''அதோ தெரியுது வழி. அந்தப் பாதையிலே சென்றால் நகரத்துள் நுழைய முடியும்'' என்று சொல்லிக் கொண்டே போகும் பாதையைக் குறிப்பிட்டுக் காட்டினான் அந்தத் திருடன்.

செல்வந்தர் அந்த திருடனைப் பார்த்து ''நீ எனக்கு நல்ல உதவி செய்து இருக்கிறாய் - உன்னை நான் மறக்க மாட்டேன். தயவு செய்து எனக்கு ஒரு உதவி செய்வாயா?'' என்று கேட்டார்.

அதற்கு திருடன் ''ஐயா நான் உங்களுக்கு வேறென்ன உதவி செய்ய வேண்டும் முடியுமானால் கட்டாயம் அந்த உதவியை நான் செய்வேன்'' என்று சொன்னான்.

செல்வந்தர் அந்தத் திருடனை நகரிற்குள் வரும்படி கேட்டார் அதற்கு திருடன்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர்

ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாசத் தரப்படுகிறது.

### சங்கானை

124402 ஏ

### நெடுந்தீவு

| | |
|---|---|
| 13213 ஏ | 13213 பி |
| 13213 சி | 13213 டி |
| 13213 ஈ | 13213எவ் |
| 13214 ஏ | 13413 ஏ |
| 13441 ஏ | 13441 பி |
| 13457 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 144653 ஏ | 144653 பி |
| 144653 சி | 144709 ஏ |
| 144726 ஏ | 144726 பி |
| 144726 சி | 144726 டி |
| 144726 ஈ | 150040 ஏ |
| 152669 ஏ | 152794 ஏ |
| 152794 பி | 152794 சி |
| 152794 டி | 152886 ஏ |
| 152886 பி | 152925 ஏ |
| 152925 பி | 152933 ஏ |
| 152933 பி | 152941 ஏ |
| 152958 ஏ | 152958 பி |
| 153093 ஏ | 153003 பி |
| 153020 ஏ | |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 13297 ஏ | 13335 ஏ |
| 13335 பி | 13335 சி |
| 13335 டி | 13335 ஈ |
| 13365 ஏ | 13365 பி |
| 13365 சி | 13366 ஏ |
| 13384 ஏ | 13384 பி |
| 13384 சி | 13384 டி |
| 13410 ஏ | 13411 ஏ |
| 13411 பி | 13411 சி |
| 13412 ஏ | 13412 பி |
| 13412 சி | 13434 ஏ |
| 13434 பி | 13453 ஏ |
| 13458 ஏ | 13458 பி |
| 13458 சி | 13471 ஏ |
| 13471 பி | 13471 சி |
| 13471 டி | 13471 ஈ |
| 13471எவ் | 13473 ஏ |
| 13478 பி | 13473 சி |
| 13478 டி | 13484 ஏ |
| 13484 பி | 13484 சி |
| 13484 டி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 136729 ஏ | 143338 ஏ |
| 143338 பி | 143338 சி |
| 143338 டி | 143338 ஈ |
| 145248 ஏ | 145248 பி |
| 145248 சி | 145260 ஏ |
| 145260 பி | 145260 சி |
| 145260 டி | 145421 ஏ |
| 145421 பி | 145459 ஏ |
| 145459 பி | 148985 ஏ |
| 148985 பி | 149025 ஏ |
| 149025 பி | 149025 சி |
| 149025 டி | 149025 ஈ |
| 149035 ஏ | 149036 ஏ |
| 144688 ஏ | 144688 பி |
| 144688 சி | 148057 ஏ |
| 148057 பி | 148057 சி |
| 149938 ஏ | 149938 பி |
| 149938 சி | 149938 டி |
| 149946 ஏ | 149946 பி |
| 149946 சி | 149946 டி |
| 149951 ஏ | 149951 பி |
| 149951 சி | 149951 டி |
| 150048 ஏ | 150048 பி |
| 150122 ஏ | 150122 பி |
| 150122 சி | 152773 ஏ |
| 152773 பி | 152773 சி |
| 152799 ஏ | 152799 பி |
| 152799 சி | 152799 டி |
| 152865 ஏ | 152865 பி |
| 152865 சி | 152904 ஏ |
| 152904 பி | 152926 ஏ |
| 152926 பி | 152926 சி |
| 152926 டி | |

### உடுவில்

| | |
|---|---|
| 145430 ஏ | 145440 ஏ |
| 145440 பி | 145440 சி |
| 145440 டி | 145440 ஈ |
| 145455 ஏ | 145455 பி |
| 145485 ஏ | 145485 பி |
| 145485 சி | 145485 டி |
| 145494 ஏ | |

### வேலணை

| | |
|---|---|
| 13231 ஏ | 13231 பி |
| 13131 சி | 13278 ஏ |
| 13278 பி | 13278 சி |
| 13278 டி | 13371 ஏ |
| 13376 ஏ | 13376 பி |
| 13386 ஏ | 13389 ஏ |
| 13392 ஏ | 13392 பி |
| 13429 ஏ | 13435 ஏ |
| 13444 ஏ | 13445 ஏ |
| 13445 பி | 134456 பி |
| 13446 ஏ | 13446 பி |
| 13456 சி | 13462 ஏ |
| 13463 ஏ | 13465 ஏ |
| 13465 பி | 13466 ஏ |
| 13470 ஏ | 13486 ஏ |
| 13486 பி | |

ஜூலை மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகிறது.

### சங்கானை

| | |
|---|---|
| 147156 ஏ | 147156 பி |
| 150454 ஏ | 150454 பி |
| 150454 சி | 152522 ஏ |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 139186 ஏ | 141677 ஏ |
| 141677 பி | 143482 ஏ |
| 143482 பி | 143482 சி |
| 148737 ஏ | 148737 பி |
| 148738 ஏ | 148738 பி |
| 148739 ஏ | 148739 பி |
| 148747 ஏ | 148748 ஏ |
| 148748 பி | 148748 சி |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| 13485 ஏ | 13493 ஏ |
| 13493 பி | 13494 ஏ |
| 13494 பி | |
| 13405 ஏ | 13423 ஏ |
| 13424 ஏ | 13424 பி |
| 13428 ஏ | 13428 பி |
| 13448 ஏ | 13449 ஏ |
| 13452 ஏ | 13452 பி |
| 13474 ஏ | 13474 பி |
| 13474 சி | 13477 ஏ |
| 13477 பி | 13477 சி |
| 13477 டி | 13481 ஏ |
| 13483 ஏ | 13483 பி |
| 13483 சி | 13483 டி |
| 13495 ஏ | 13497 ஏ |
| 13497 பி | 13497 சி |
| 13500 ஏ | 13501 ஏ |
| 13578 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 143313 ஏ | 145245 ஏ |
| 145426 ஏ | 145426 பி |
| 145432 ஏ | 145432 சி |
| 145499 ஏ | 145500 ஏ |
| 147627 ஏ | 147627 பி |
| 149027 ஏ | 149027 பி |
| 149027 சி | 149027 டி |
| 149027 ஈ | 149027 எவ் |
| 149099 ஏ | 149099 பி |
| 149140 ஏ | 149140 பி |
| 149140 சி | 149140 டி |
| 149140 ஈ | 149140 எவ் |
| 149185 ஏ | 149776 ஏ |
| 149776 பி | 149776 சி |
| 149792 ஏ | 150874 ஏ |
| 145432 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 141170 ஏ | 141170 பி |
| 149912 ஏ | 152841 ஏ |
| 152841 பி | 152819 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 135586 ஏ | 148288 ஏ |
| 148288 பி | 148288 சி |
| 148290 ஏ | 148290 பி |
| 148290 சி | 148290 டி |
| 14290 ஈ | 150533 ஏ |
| 150565 ஏ | 150640 ஏ |
| 153258 ஏ | 153258 பி |
| 153258 சி | 153339 ஏ |
| 153339 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 147073 ஏ | 147073 பி |
| 150515 ஏ | 150516 ஏ |
| 150516 பி | 150516 சி |

### உடுவில்

| | |
|---|---|
| 145457 ஏ | 150005 ஏ |
| 15005 பி | 135500 ஏ |
| 146420 ஏ | 146420 பி |
| 146420 சி | 146420 டி |
| 150311 ஏ | 150311 பி |
| 150311 சி | [illegible] ஏ |
| 150679 ஏ | 150679 பி |
| 153213 ஏ | 153213 பி |
| 153255 ஏ | 153255 பி |

### வேலணை

| | |
|---|---|
| 13430 ஏ | 13430 பி |
| 13455 ஏ | 13455 பி |
| 13459 ஏ | 13459 பி |
| 13460 ஏ | 13464 ஏ |
| 13464 பி | 13464 சி |
| 13464 டி | 13464 ஈ |
| 13464 எவ் | 13466 ஏ |

வில்லை. பலவாறாகக் கெஞ்சினார். திருடர்கள் தமக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவ விடுவார்களா? அவர்கள் செல்வந்தரைக் கொல்லப்போவதாகப் பயமுறுத்தினர்.

வேறு வழி தெரியவில்லை செல்வந்தருக்கு. அவருக்கு உயிர் தப்புவதுதானே பெரிது! அதனால் இருக்கிற அனைத்தையும் எடுத்துக் கொடுத்துவிட்டு தன்னைக் கொல்ல வேண்டாம் என்று திருடர்களிடம் கெஞ்சினார். ஆனால் திருடர்களில் ஒருவன் அவரைக் கொல்லும் எண்ணத்தில் கத்தியை உருவினான். செல்வந்தரை வெட்டப் போனான் இவனை உயிரோடு விட்டு வைப்பது ஆபத்து என்று எண்ணினான் போலும். அந்தத் திருடன் செல்வந்தரைக் கொல்லும் எண்ணத்துடன்சென்றபோது அவனை மற்றோர் திருடன் மறித்தான். ''இவனைக் கொல்வதாலே நமக்கு என்ன லாபம்? இவனது கையைக், காலைக் கட்டி இங்கேயே போட்டுவிட்டுப் போவோம்'' என்று மற்றத் திருடன் கூறினான். அவன் அவ்விதம் கூறியது சரியெனப்பட்டது மற்றைய திருடனிற்கு. இறுதியில் மூன்று திருடர்களும் ஒரு

செல்வந்தர் அந்தத் திருடனை நகரிற்குள் வரும்படி கேட்டார் அதற்கு திருடன் ''ஐயா நீங்கள் சொல்லுகிற மாதிரி நான் அங்கெல்லாம் வருவதற்கு இல்லை. வரக் கூடிய தகுதியும் இல்லை! வந்தால் காவலர்கள் என்னைப் பிடித்துக் கொள்வார்கள்'' என்று பதிலளித்தான் இவ்விதம் சொல்லிக் கொண்டே திருடன் காட்டிற்குள் சென்று மறைந்தான்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னகதை இது இந்தஉலக வாழ்க்கை ஒரு காடு மாதிரி இந்தக் காட்டிலே அந்தத் திருடனைப் போன்று மூன்று மனோபாவங்கள் உண்டு. சத்துவ குணம், ரஜோகுணம், தமோகுணம் இவை தான் அந்தத் திருடனின் மனோபாவங்கள். அந்தத் திருடனின் மூன்று மனோபாவங்களும் அத் திருடனுள்ளே உள்ள மூன்று குணங்கள் தமோகுணம் ஒரு மனிதனைக் கெடுக்கிறது. ரஜோகுணம் செயலாற்றலைத் தூண்டி அதிகார மனோபாவத்தை ஏற்படுத்துகிறது சத்துவ குணம் எமது கட்டுக்களை அவிழ்த்து விடுவிக்கிறது.

(நா)

**தென்கச்சி சுவாமிநாதன்**

| | |
|---|---|
| 148985 பி | 149025 ஏ |
| 149025 பி | 149025 சி |
| 149025 டி | 149025 ஈ |
| 149035 ஏ | 149036 ஏ |
| 149036 பி | 149036 சி |
| 149051 ஏ | 149051 பி |
| 149059 ஏ | 149059 பி |
| 149085 ஏ | 149085 பி |
| 149087 ஏ | 149100 ஏ |
| 149100 பி | 149150 ஏ |
| 149150 பி | 149177 ஏ |
| 149177 பி | 149207 ஏ |
| 149207 பி | 149218 ஏ |
| 149218 பி | 149218 சி |
| 149218 டி | 149712 ஏ |
| 149723 ஏ | 149723 பி |
| 149729 ஏ | 149729 பி |
| 149735 ஏ | 149735 பி |
| 149735 சி | 149735 டி |
| 149735 ஈ | 149735 எவ் |
| 150826 ஏ | 150845 ஏ |
| 153192 ஏ | 153515 ஏ |
| 153515 பி | 153515 சி |
| 153515 டி | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 140976 ஏ | 141053 ஏ |
| 144817 ஏ | 144941 ஏ |
| 144941 பி | 145302 ஏ |
| 145302 பி | 145302 சி |
| 145309 ஏ | 145390 ஏ |
| 145390 பி | 145390 சி |
| 145390 டி | 145454 ஏ |
| 145481 ஏ | 145526 ஏ |
| 145615 ஏ | 145685 ஏ |
| 145686 ஏ | 145687 ஏ |
| 150198 ஏ | 150198 பி |
| 144563 ஏ | 144563 பி |
| 144563 சி | 144665 ஏ |
| 144665 பி | 144665 சி |
| 144665 டி | 144668 ஏ |

**நெடுந்தீவு**

| | |
|---|---|
| 13485 ஏ | 13493 ஏ |
| 13493 பி | 13494 ஏ |
| 13494 பி | |

**யாழ்ப்பாணம்**

145420 ஏ

**ஊர்காவற்றுறை**

| | |
|---|---|
| 13169 ஏ | 13169 பி |
| 13169 சி | 13169 டி |
| 13169 ஈ | 13174 ஏ |
| 13174 பி | 13247 ஏ |
| 13247 பி | 13307 ஏ |
| 13307 பி | 13322 ஏ |
| 13403 ஏ | 13403 பி |

| | |
|---|---|
| 13464 பி | 13464 சி |
| 13464 டி | 13464 ஈ |
| 13464 எவ் | 13466 ஏ |
| 13466 பி | 13466 சி |
| 13478 ஏ | 13478 பி |
| 13478 சி | 13478 டி |
| 13482 ஏ | 13482 பி |
| 13487 ஏ | 13488 ஏ |
| 13488 பி | 13488 சி |
| 13489 ஏ | 13490 ஏ |
| 13490 பி | 13496 ஏ |
| 13503 ஏ | 13503 பி |
| 13511 ஏ | 13512 ஏ |
| 13518 ஏ | 23530 ஏ |

(சு-த)

# எழுதுநர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 6இலிருந்து இருவாரங்கள்வரை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இம் மாதம் 6 ஆம் திகதி நடை பெறவிருக்கும் எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த பதவிகளுக்கு ஆட்களை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு மேலும் இருவாரங்கள் வரையில் பரீட்சார்த்திகள் தோற்றலாம்என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவோருக்கான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான இடையூறுகள் மற்றும் தாமதங்கள் குறித்து சம்பந்தப்பட்டோர் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தாவிடம் எடுத்துக் கூறியதை அடுத்து அவர் இது விடயம் தொடர்பாக மேற்கொண்ட துரித நடவடிக்கையினால் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நேர்முகத் தெரிவிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 70 பேர் தெரிவு செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# இத்தாலிக்குள் நுழைய முயன்ற 418 சட்டவிரோதிகள் கைதாகினர்

## இலங்கையரும் அடங்குவர்

[ரோம்]

இத்தாலிக்குள் சட்ட விரோதமாக நுழைய முற்பட்ட 418 பேரை அந்த நாட்டின் கரையோரப் பகுதி பொலிஸ் படையினர் கைது செய்திருக்கிறார்கள். இவர்களில் இலங்கையர்களும் காணப்படுகிறார்கள்.

சுமார் 50 மீற்றர் நீளமான கப்பலொன்றில் 367 பேர் பயணம் செய்ததாக முன்னைய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இக் கப்பல் கிரேக்கத்தின் கொடியுடன் காணப்பட்டாலும் உண்மையிலேயே துருக்கியில் பதிவு செய்யப்பட்டதாக இருக்கலாமென்று அதிகாரிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

ஆட்கடத்தலுக்கு எதிரான போராட்டத்திற்கு சர்வதேச ஒத்துழைப்புபோதுமானதாக இல்லையென்பதால் கோபமடைந்த அந்த நாட்டு உள்த்துறை அமைச்சு ஆட்கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டிருக்கின்றது. (து)

## 37 வது ஆண்டு விழாவை கொண்டாடும் சீன தமிழ் வானொலி

(பீஜிங்)

சீன வானொலி தமிழ் ஒலிபரப்புத் தொடங்கி 37ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது.

இவ் விழாவினையொட்டி தமிழ் ஒலிபரப்பில் விசேட நிகழ்ச்சிகளாக இசை, நாடகம், கதை, கவிதை போன்ற அம்சங்கள் இடம் பெற இருப்பதாக மேற்படி செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதே வேளை சீனாவில் தமிழ் வானொலியில் ஆரம்ப அறிவிப்பாளராக மாதகலைச் சேர்ந்த கந்தசாமி சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## வடக்கு-தெற்கு கொரியபேச்சு

(யொங்யாங்)

வடக்கு மற்றும் தென் கொரிய உயர்அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் சியோல் நகரில் தொடங்கியுள்ளன.

சென்றமாதம் சியாங்கியாங்கில் இருநாட்டு தலைவர்களுக்கிடையில் நடந்த உச்சிமகாநாட்டில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் தொடர்நடவடிக்கையாகவே இப் பேச்சுவார்த்தை இடம்பெறஉள்ளது. (து)

## அஸாமில் குண்டுவெடிப்பு

(புதுடில்லி)

அஸாம் மாநிலத்தில் பிரிவினைவாத கெரில்லாக்கள் ரயில் தண்டவாளத்தில் குண்டொன்றினை வெடிக்கச் செய்துள்ளனர்.

இதனால் சீமெந்தை ஏற்றிச் சென்ற 12 ரயில் பெட்டிகள் தடம்புரண்டன. (உ)

பிரித்தானியாவுக்குள்

## சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 30 ஆசிய நாட்டவர்கள் கைது

(லண்டன்)

பிரித்தானியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைய முற்பட்ட 30 ஆசிய நாட்டவரை டோவர் துறைமுகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களைக் கடத்தி வரப் பயன்படுத்தப்பட்டபாரவூர்தி தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் விசாரணைக்குள்ளாகி வருகிறார்.

டோவர் துறைமுகத்தினூடாக மேற்படி 30 பேரையும் கடத்தி வந்த பாரவூர்தி சாரதி, சுங்கப் பரிசோதனைகளுக்காக பொலிஸார் தடுத்த போது வாகனத்தை நிறுத்தாது வேகமாய் சென்றதாகவும் 60 கிலோ மீற்றர் வரை பொலிஸார் துரத்திச் சென்று கைது செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் புதிய சட்டத்தின் பிரகாரம், லொறிச்சாரதி 90 ஆயிரம் டொலர் அபராதம் செலுத்த வேண்டி வரலாம் எனக் கருதப்படுகிறது. (உ)

## றோ. கத். ஆயர் குத்திக்கொலை ஆந்திர மாநிலத்தில் சம்பவம்

(புதுடில்லி)

றோமன்கத்தோலிக்கஆயர் ஒருவர் தேவாலயத்தை விட்டு வெளியே வரும் போது கூரிய ஆயுதங்களால் குத்திக் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

குண்டூர் பொலிஸ் உடனே செயல்பட்டு ஒருவரைக் கைது செய்துள்ளது. வேறு இருவரை அடையாளம் கண்டுள்ளது.

அடையாளம் தெரியாத 3 பேர் தேவாலய வளாகத்துக்குள் புகுந்து அலுவலகத்தை விட்டு வெளியேவந்து கொண்டிருந்த ஆயரை ஆயுதங்களால் தாக்கினார்களென்றும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

தேவாலயச் சொத்துக்கள் தொடர்பான பகைமையே இந்தக் கொலைக்கு காரணம் என்றும் சொல்லப்படுகிறது. ஆயரை மருத்துமனைக்கு கொண்டு செல்லும் போது மரணமானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலகத் தகவல்களை சேகரிக்க ஜப்பான் புதிய முறை அறிமுகம்

(ரோக்கியோ)

உலகச்செய்திகளைச்சேகரிப்பதற்காக செயற்கைக் கோள்களை வானில் அனுப்பும் திட்டத்தை ஜப்பான் வெகு விரைவாக நடைமுறைப்படுத்திவருகிறது.

குறிப்பாக உளவுத்துறைக்குப்பயன்படக்கூடியதும், பாதுகாப்புத்தொடர்பான செய்திகளை சேகரிக்கக் கூடியதுமான 4 செயற்கைக் கோள்களை ஜப்பான் அனுப்புவதற்குத்திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [து]

## இஸ்ரேல் உளவு அமைப்புக்கு துடிப்பான இளைஞரைச் சேர்க்க முயற்சி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் உளவு நிறுவனமான மொஸாட் முதல் தடவையாக ஆட்களை வேலைக்கமர்த்துவதற்கு பத்திரிகை மூலம் விளம்பரம் செய்துள்ளது.

நீண்டகால அனுபவமும் உலகிலேயே சிறந்த உளவு நிறுவனமுமான மொஸாட், வெளிப்படையாகவே அமைப்பிற்கென ஆட்களை இணைப்பது இதுவே முதல்தடவையாகும்.

மனக்கிளர்ச்சி தரும் இவ் வேலைக்கு துடிப்புள்ளஇளைஞராகிய, 25இற்கும் 35இற்கும் இடைப்பட்ட வயதுடைய நீங்கள் விண்ணப்பிக்கலாம், என மிகவும் கவர்ச்சிகரமான முறையில் இவ் விளம்பரம் கோரப்பட்டுள்ளது.

இஸ்ரேல் நாட்டிற்கு தொடர்ந்தும் இருந்துவரும் அச்சுறுத்தல்களை சமாளிக்கும் வகையிலேயே துடிப்பான புதியவர்களைச் சேர்க்கும் முயற்சி இடம்பெற்றிருப்பதாக தெரியவருகிறது. (உ)

## சீன அமைச்சர் சிங்கப்பூர் விஜயம்

(பீஜிங்)

சீன வெளியுறவு அமைச்சர் அரசமுறைப்பயணமாகச் சிங்கப்பூர் சென்றுள்ளார்.

இரண்டுநாள் அங்கு தங்கியிருக்கும் அவர் சிங்கப்பூர் பிரதமரையும் செயலரையும் கண்டு பேச்சுவார்த்தைநடத்துவாரென்று அறிவிக்கப்படுகிறது.

அதேவேளை சீனஅமைச்சர் சிங்கப்பூர் வெளியுறவுஅமைச்சர் ஜெயகுமாரையும் சந்தித்து பேச்சுவார்த்தைநடத்துவார்என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## நடிகர் ராஜ்குமார் உறவினருடன் வீரப்பனால் கடத்தப்பட்டார்

(பெங்களூர்)

சந்தன மரக்கடத்தல் காரனான வீரப்பன் பிரபல நடிகர் ராஜ்குமாரையும் அவரது மூன்று உறவினர்களையும் கடத்திச்சென்றுள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் முதலமைச்சர் எஸ். எம். கிஸ்ஸா பெங்களூரில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

ராஜ்குமார் 200 படங்களுக்குமேல் நடித்தவர் என்பதும் இந்தியாவில் தலைசிறந்த வாதா சாஹிக் விருதையும் பெற்றவர்என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ராஜ்குமார் கடத்தப்பட்டதைத்தொடர்ந்து பெங்களூரில் தமிழர்களுக்கும் வீரப்பனின் ஆட்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

புதிதாகத் தான் கட்டிய வீட்டில் குடியிருந்தபோதே அவர் கடத்தப்பட்டார்.

வீரப்பனும் அவனது 12 உதவியாளர்களும் திடீரெனத்தாக்கியதுடன் வீட்டாரின் நகைகளையும் அபகரித்துச்சென்றார்கள்.

கடத்தப்பட்ட ராஜ்குமாரின் மனைவியிடம் ஒலிநாடா ஒன்றை வீரப்பனின் ஆட்கள் கொடுத்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பணயப்பணமாக 5 கோடி ரூபா செலுத்தப்படவேண்டுமெனவும் வீரப்பனின் ஆட்கள் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## செய்திப்பரல்

★ இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அமெரிக்க நாடாளுமன்றில் செப்டெம்பரில் உரை நிகழ்த்துவார்.

★ இந்திய ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் வகிப்பதை வியட்நாமும் கம்போடியாவும் வலியுறுத்தும்.

★ பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டத்தை குவைத் நிறைவேற்றியது.

★ சீனாவில் உலகளாவிய இலக்கிய திறனாய்வுக்கருத்தரங்கு ஆரம்பமாகியுள்ளது.

★ பிஜியின் பிணைக்கைதியாக இருந்து விடுதலையான மகேந்திர சௌத்திரி வைத்திய பரிசோதனைக்கு அவுஸ்திரேலியா சென்றுள்ளார்.

★ இரண்டாவது உலகக் கத்தோலிக்க ஒலிபரப்பு மாகநாடு மணிலாவில் நடைபெற இருக்கிறது இதில் முன்னாள் யாழ். இறையியல் விரிவுரையாளர்சந்திரகாந்தனும் கலந்து கொள்ள இருக்கிறார்.

★ சிங்கப்பூரின்நாணய மதிப்புகூடி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

★ ஜப்பானுக்குக் உரிய தீவு ஒன்றில் கடந்த வருடம் 40 ஆயிரம் தடவை நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது.

★ மகாராஷ்டிரமாநிலத்தில் எலிக்காய்ச்சலினால்26 பேர்இறந்துவிட்டனர்.

## மீண்டும் ஆட்சி அமைக்கப்போவதில்லை பிஜி முன்னாள் பிரதமர் உறுதி

பிஜி நாட்டின் பதவி விலக்கப்பட்ட முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்திரி நாட்டுக்கு வெளியே இருந்து கொண்டு அரசு அமைக்கும் முயற்சி எதிலும்தான் ஈடுபடபோவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் தங்கியுள்ள சௌத்திரி அங்கு பிரதமர் யோன்காட் அவர்களைச் சந்திக்கவிருக்கின்றார். பிஜி நாடு மீண்டும் அரசியல் சாசன முறையிலான ஆட்சிக்கு திரும்பும் எனவும் அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்படும் எனவும் சௌத்திரி மேலும் தெரிவித்துள்ளார்.

## செயற்கை இருதயம் பொருத்துவதில் இஸ்ரேலிய நிபுணர் அபார சாதனை

(ஜெருசலேம்)

நிரந்தரமாக செயற்கை இருதயம் ஒன்றினைப் பொருத்துவதில் இஸ்ரேலிய அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் வெற்றியடைந்துள்ளனர்.

இத்தகைய செயற்கையான இருதயம் பொருத்தும் முயற்சி வெற்றியளித்திருப்பது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

4 பிள்ளைகளின் தந்தையான 64 வயதுடைய இஸ்ரேலிய சாதாரண குடிமகன் ஒருவக்கு, வேறுசில காரணங்களால் வழக்கமாகப் பொருத்தப்படுவது போன்று மனித இருதயத்தைப் பொருத்த முடியாது இருந்த காரணத்தினால், செயற்கை இருதயம் ஒன்றைப் பொருத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

காட்மீற்போட் எனும் இந்த புதியரக செயற்கை இருதயம் தற்போது நன்கு செயற்படுகின்ற போதும், நோயாளி இன்னமும் அபாயகரமான கட்டத்தை தாண்டவில்லை எனவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பந்தப்பட்டவருடைய இருதயத்திற்கு அருகிலேயே பொருத்தப்பட்டுள்ள செயற்கை இருதயம். தற்போது வெளியில் உள்ள மின்கலம் ஒன்றின் மூலமே இயங்குகின்ற போதிலும் காலகெதியில் உடலுக்குள்ளேயே பொருத்தப்படுகின்ற சிறிய மின்கலம் ஒன்றின் மூலம் இயங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேசமயம்,

இவ் செயற்கை இருதயம் பொருத்தும் முயற்சி வெற்றியளித்ததையடுத்து, மாற்று இருதயங்கள் போதியளவில் கிடைக்காததால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடந்து வந்த இருதய மாற்றுச் சிகிச்சைகளின் எண்ணிக்கை மிகப்பெரும் அளவில் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-து)

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்.
- குறள்

வலம்புரி

## நொண்டிக் குதிரைக்கு

நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு என்று கூறுவதுபோல் நாலுவருடங்களாக ஏதோ மூடு மந்திரம் போட்ட தந்திர புருஷன் ரணில் இன்று கோதாவுக்கு வெளியாலை நிற்கிறார். அவரைத் தனியவிடாது துறவு பூண்ட துரைமாரும் சேர்ந்து கொண்டார்கள். ஏதோ அதிர்ஷ்டவசமாக சேர்ஜோன்கொத்தலாவலை இன்றில்லை. அன்று கொக்கரித்த பிக்குமாருக்கு தலைவீலே தார்பூச முற்பட்டவர் கொத்தலாவலை.

சுட்ட மண்ணும் பச்சை மண்ணுமாய் வாழுகின்ற தமிழரதும், சிங்களவரினதும் நிலை சாணேற முழம் சறுக்கும். இந்த ஏமாற்று நிலை வேண்டாமென்ற காரணத்தாலேதான் எம்மை வாழ விடுங்கள். பிச்சைக்குக் கையேந்தும் நிலை எமக்கு வேண்டாம். எங்கள் நலனை நாமே பார்க்கும் வல்லமை எமக்குண்டு என எரிமலையாய் வெடிக்கும் இதயங்களோடுதுடிக்கும்இளைஞர்கள்.

குரங்கும் பூனைகளும் அப்பம் பங்கிட்ட மாதிரி எங்கள் அரசியல் சீர்திருத்தம் இருக்கிறது. பெரும்பான்மை அரசு என்ன செய்யப்போகிறது காலம் காலமாக தமிழனை ஏய்த்துப் பிழைக்கலாம் என்று நினைக்கிறதா?

எந்தப் பிரச்சினையும் இங்கே இல்லை என்று சப்பைக்கட்டு கட்டிய காலம் மலையேறிப்போச்சு. சர்வ தேசமும் உயிர்பலி, உடமை நாசம் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளால் நலியும் தமிழன் நிலையைப் புரிந்து கொண்டுள்ளது. யாரையும் இனி ஏமாற்ற முடியாது. அம்மா தீர்க்கக்கூடாதுஐயா தான் தீர்க்கவேண்டுமென்ற வீம்பு நிலையா? மாறிமாறி வரும் அரசுகள் இப்படியே இழுத்தடித்தால் அலுத்துப் போய் தமிழன் வாளாவிருந்துவிடுவான் என்ற நினைப்புப்போலும்.

இந்த நிலையில் தான் சாவா வாழ்வா, செய் அல்லது செத்துமடி என்றஉணர்வலைகள்உள்ளத்தை உலுக்கும். ஓநாய் ஓநாய் என்று ஒரு நாளைக்கு ஓநாய் வந்துதான் தீரும். அன்றைக்குத் தான் அரைக் கோவணத்துடன் அங்கலாய்த்த மர மண்டையன் முழிக்கப் போகிறார்கள். உண்மை நிலை அதுதான். அதற்காக பட்ட துன்பத்தோடு பாதித் துன்பம்என்று உள்ளத்தைத் தமிழன் பக்குவப் படுத்திக் கொள்ளட்டும்.

இரட்டை நாக்குப் படைத்த சிங்களனும் சிங்கவல்லியினதும்சீராளர்கள்சிந்திக்க மாட்டார்கள் தான் சுவரிலே வைத்துச் சாந்திட்டவர்கள் எம்மைக் கடலிலே தள்ளிக் கல்லுப்போடப்பின் நிற்பார்களா?

அன்புடன் ஆசிரியர்

# நம் உடலிற்கு நலம்பல விளைவிக்கும் கற்றாழை

## மகத்துவத்தை நாளும் போற்றுவோம்

நம் உடலிற்கு நலம் விளைவிக்கும் கற்றாழையின் மகத்துவம் குறித்து ஆயுள்வேத வைத்திய முறை, மற்றும் பழமையான வைத்திய குறிப்பிலும் விதந்து போற்றப்பட்டுள்ளது.

அவ்வகையில் கற்றாழையின் பயன்பாடு குறித்து ஆராய்வது பொருத்தமானது.

நம் நாடு முழுவதும், ஆற்றங்கரைகளிலும், சதுப்பு நிலங்களிலும், தோட்டங்களிலும்கற்றாழை பயிராகும். சிலர் தமது வீட்டிலும் கூட வளர்ப்பதுண்டு.

பலவகைக் கற்றாழைகள் இருக்கின்றன. சிறுகற்றாழை பெருங் கற்றாழை, பேய்க் கற்றாழை, கருங்கற்றாழை எனப் பல வகை இருப்பினும், இவற்றின் செய்கைமுதலியன சற்றேறக் குறைய ஒன்று போலவே இருக்கும்.

### கற்றாழை சோறு. பூ

கற்றாழையைப் பிளந்துநடுவில் பார்க்க, பசிய நீர்ச்சத்துள்ள கொழ கொழப்பான சதைப் பகுதி காணப்படும். இதனையே சோறு என்பர். சோறு மிகுந்த இக்கற்றாழை, சோற்றுக் கற்றாழை என்றே அழைக்கப் பெறும். இதன் பூ வெண்மை நிறமுடையது. மருத்துவச் சாத்திரங்களில் இதற்குக் குமரி என்றும், கன்னி, என்றும் பெயர்சொல்லப்படுகிறது.

உண்டாகும். வெண்ணெய் கற்கண்டு, வால்மிளகுத்தூள் இவைகளைச் சாற்றுடன் சேர்த்து உண்ண நீர்ச்சுருக்கு உடல் எரிப்பு, உள்வேட்கை நீங்கும்.

### உடல் உஷ்ணம் நீங்க

தேவையான, கற்றாழையின் சாற்றை எடுத்து, நன்றாகச் சுத்தம்பார்த்துக்கழுவி விட்டு, பிறகு அதோடு பனங் கற்கண்டு போதிய அளவு சேர்த்துச் சாப்பிடும் பட்சத்தில் மேற்கண்ட நோய்கள் நீங்கும் என்பதில் ஐயமில்லை.

கிராமப் புறங்களில்இதனை வழக்கமாக உண்டு வருகிறார்கள் இன்றும் இது கைகண்ட மருந்து.

கற்றாழைச் சோறுஎண்பது கிராம் அளவில் எடுத்து, நன்றாகக் கழுவிச்சுத்தம்பார்த்து உரலில் போட்டு அரைத்து எடுத்துக் கொண்டு, சிறிய சட்டியில் போட்டு 400 மி.லி. விளக்கெண்ணெய் கலந்து, காய்ச்சி, நீர்ச்சத்து மாறியவுடன் இறக்கி வைத்துக் கொண்டு, தேவைப்பட்ட போது காலை மாலைவேளைகளில் ஒருகிராம்வீதம் அருந்தி வர மேற்கண்ட நோய்கள் விலகும். தவிர, உடல் உஷ்ணம் நீங்கி உடம்பு மினுமினுப்படையும். கல்லீரல் கூட பலமடையும். மலச்சிக்கல் அறவே ஒழியும்.

### தீராத சூடுநீங்க

கற்றாழையைக் கொண்டு வந்து மேல் தோலை நீக்கி,

கள் நீங்கும்.

### பேதி குணமாக

தேவையான சோற்றுக் கற்றாழையின் இளமடலைக் கொண்டு வந்து, தோல்நீக்கி தண்ணீரில் நன்றாக அலம்பி பிறகு அந்தச் சோற்றையும் கொஞ்சம் சீரகம், கற்கண்டு ஆகியவற்றையும் தகுந்தாற்போல் வைத்து எல்லாவற்றையும் அம்மியில் வைத்து அரைத்து, காலையில் சாப்பிட மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

பால்

இதை, கண் இரப்பையில் உண்டாகும், புண்களுக்குத் தடவலாம்.

கற்றாழைச் சோறு 100 கிராம் சிற்றாமணக்கெண்ணெய் 350 கிராம் இவைகளை ஊறவைத்து அரைத்து ஒரு சட்டியில் ஊற்றி, வெந்

சதைப் பகுதியை எடுத்து இரவில் தலையில் சொட்டை பாகத்தில் நன்றாகத்தேய்த்து விட்டு காலையில் சீயாக்காய் தேய்த்து தலைமுழுகச்செய்ய வேண்டும். ஒருநாள்விட்டு ஒரு நாள் இப்படிச் செய்து வந்தால் முடி வளரும். இந்த மருத்துவம் வயதானவர்களுக்குப் பலன் தராது. முடிவளர்வதற்கு நல்ல இரத்த ஓட்டம் இருக்கவேண்டும்.

எலும்புருக்கிப் பிணியிலும், உடல் நலிவடையும் நோய்களிலும் கற்றாழைச் சோற்று எண்ணெய் நல்ல பலன் அளிக்கிறது. அரை விற்றர் விளக்கெண்ணெயில் சுமார் 70 கிராம் எடைஉள்ள கற்றாழைச் சோற்றை ஊற வைத்து அரைத்துக் காய்ச்சி, நீர்ச்சத்து மாறியவுடன் இறக்கிவைத்துக் கொண்டு,

**டாக்டர் ஏ. ஆர். என். துரைறாஜ்**

தயம்ஒன்பதுகிராம் வெள்ளை வெங்காயம் ஒன்று அரிந்து போடவும் எல்லாவற்றையும் சட்டியில் போட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டி, ஒரு போத்தலில் சேமித்து வைத்துக் கொண்டு காலையில் அல்லது இரவில்படுக்கைக்குப் போகும் முன்னராகிலும் ஓர் உச்சிக் கரண்டி அளவு சாப்பிட்டு வர மேற்கண்ட நோய்கள்நீங்கும்.

### கண்களில் ஏற்படும் சிகப்பு நீங்க

சோற்றுக் கற்றாழை மடல் சிறிது கொண்டுவந்து, தோல் நீக்கி, அந்தச்சதையைத்தண்ணீர் விட்டு நன்றாக அலம்பி சதையைக் கண்களில் வைக்கும் அளவுக்கு வட்டமாக அறுத்து, இரவு படுக்கு முன் கண்ணின் மேல் வைத்து, துணி கொண்டு கட்டிவிட வேண்டும். காலையில்எழுந்த பிறகு எடுத்து விட வேண்டும் இவ் விதமாகத் தொடர்ந்து மூன்று நாட்கள் செய்யும்பட்சத்தில் கண்களில் ஏற்படும் சிகப்பு நிறம் மாறும்.

### முடி கருமையாக வளர

தேவையான கற்றாழைச் சோற்றை எடுத்து. தேங்காய் எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்து வந்தால் முடி கருகருவென நீளமாக வளரும். இந்த எண்ணெயில் தலை முழுகிவந்தால் கண் குளிர்ச்சி உண்டாகும்: நல்ல தூக்கமும் வரும்.

சோற்றுக் கற்றாழையின்

காலை மாலை இருவேளைகளில் ஒரு தேக்கரண்டி வீதம் அருந்தி வர, உடல் அனல் மாறி, மேனி பளபளப்பாகத் தெரியும், கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும். நீண்ட கால மலச்சிக்கல் நீங்கும். இந்த எண்ணெயைப் பெண்கள் சாப்பிட்டு வந்தால், மாதாந்திர ருதுவை ஒழுங்குபடுத்தும்.

### மூலம் நீங்க

கற்றாழையை எடுத்து மேல்தோலை நீக்கி, அந்தச் சதையை நன்றாக கழுவி, அதில் உள்ள சோற்றை எடுத்து இரண்டு பிடி முருங்கைப்பூஎடுத்து, இரண்டையும் அம்மியில் வைத்து, அதில் பசுவின் வெண்ணெய் விட்டு அரைத்து, எலுமிச்சம் பழ அளவில் எடுத்து 3 நாள் சாப்பிட மூலம் பிரமியானது நீங்கும்.

காற்றாழையைக் கொண்டு வந்து தோல் நீக்கி, அச்சோற்றைத் தண்ணீரில் போட்டு பல தடவை நன்றாகக் கழுவி, பிறகு அரிவாள்மணையில் எலுமிச்சை அளவில் அரிந்து எடுத்து வைத்துக் கொண்டு; அரை லிற்றர், பசுவின் பாலில் போட்டு வைத்துக்கொள்ளவும்.

அதிகாலையில் பல் துலக்கி, வெறும் வயிற்றில் அருந்தி வரும் பட்சத்தில் மேற்படி பிணிகள் நீங்கும், இதுபோல் 10 நாட்கள் தொடர்ந்து அருந்தவேண்டும்.

(க)

## மருத்துவ விளக்கம்

### தீரும் நோய்கள்

கண் நோய், கண் சிகப்பு, மாந்தம், உடல், எரிவு, நீர்ச்சுருக்கு, உள்வேட்கை, உள்சூடு, மேக அனல், கல்லீரல் நோய், உடல் அரிப்பு, கற்றாழை நாற்றம், முளை மூலம் மூலக்கடுப்பு, மூலச்சூடு, சொறி, சோகை, கால் எரிச்சல், சிறுநீர் எரிச்சல், மலச்சிக்கல், உடல் பலவீனம், தொழு நோய், வாதமேகம், கருமேகம், ஆகியவை கற்றாழையினால் தீரும்.

### கண்நோய்கள் நீங்க

கண்களில் இருக்கும் நோய் நீங்க, சோற்றுக் கற்றாழையின் மேல் தோலை உரித்து, அதன்உள்ளிருக்கும்சோற்றை எடுத்து நன்றாகக் கழுவி, சுத்தம் பார்த்து, அதில் பொரித்த படிகாரம் சிறிது வைத்து, அதிலிருந்து வரும் நீரைக் கண்ணில் விட, கண்நோய் நலம் பெறும் என்பது சித்த வைத்திய மூதாதையர்களுடைய கைபாகம்:

கற்றாழையின் மேல் தோலை நீக்கி. அச்சோற்றை எடுத்துப் பலமுறை கழுவ வேண்டும். ஏனென்றால், நாற்றம் போக நீக்க வேண்டும். கொஞ்சம் சோற்றை எடுத்து, வெள்ளை நிறமுள்ள கைக்குட்டை போன்ற துணியில் வைத்து, கூட சீனாக் கற்கண்டு சேர்த்து, முடிந்து தொங்கவிட, அதில் நீர் வடியும்: அந்த நீரைப் பிடித்துக் கண்களில் விட கண் சிகப்பு, கண்ணருகல் ஆகியவை மாறும்; வெப்பத்தைத்தணிப்பதற்காகும்பற்பச்செந்தூரம் தயாரிப்பதற்கும் இச்சாற்றைப் பயன்படுத்துவார்கள் சித்தமருத்துவர்கள். சாற்றை வெதுப்பி மாந்த நோய்களுக்கும், ஊழியால் காணும் நீர் வேட்கைக்கும்கொடுக்கலாம். தாபிதங்களுக்கும், வீக்கங்களுக்கும் பூச, அவை தணியும் நல்லெண்ணைய் ஓர் எடையாகக் கலந்து காய்ச்சித்தலையில் தடவிவர, தூக்கம்

அச்சோற்றைப் பலமுறை கழுவி எடுத்து, நெல்லின் அளவு எடுத்து அதில் டைமண்ட் கற்கண்டு அல்லது சர்க்கரை சேர்த்து அதன் கூட கல்நார் பஸ்பம் வைத்துச் சாப்பிடவும். இந்தவிதமாகக் காலை மாலை இருவேளையும் 2 வாரம் சாப்பிட மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

கற்றாழையின் சோற்றை எடுத்து நன்கு கழுவி, சுத்தம் பார்த்து அதை முளை மூலத்துக்கு மேல் வைத்துக் கட்ட மூலக்கடுப்பு நீங்கும். வெளி வந்த மூலம் உள்ளே இழுத்துக் கொள்ளும்.

கற்றாழையின் சோற்றை நன்கு கழுவி சுத்தம்பார்த்து, சோறும் ஆவின்பாலும்கலந்து சாப்பிட்டுவந்தால், மூலச்சூடு தணியும், தாது கட்டும், சொறி, நமை, சோகை முதலியவை நீங்கும்.

கற்றாழையின் சோற்றை எடுத்துக் கொண்டு, அதாவது சுமார் ஒரு கிலோ போல் எடுத்து சிறு சிறு (நெல்லி) அளவில் அல்லது துண்டுகளாக வெட்டிக் கொண்டு. இத் துண்டுகளைப் பலமுறை தண்ணீர் விட்டுக் கழுவி எடுக்க வேண்டும். காரணம், அவற்றின் பசிய நீர்ச்சத்துள்ள கொழ கொழப்பான சதைப் பகுதியில் உள்ள நாற்றம் அகலும் வரை கழுவ வேண்டும். பின், ஒரு சட்டியில் கற்றாழைத் துண்டுகளைப்போட்டு, அரைக்கிலோ பனங்கற்கண்டுடன், வெள்ளை வெங்காயத்தை இடித்து, அதன் சாறு அரை தம்ளர், சீரகம் 5 கிராம் சுத்தமான விளக்கெண்ணெய் ஒரு கிலோ ஆகியவற்றை சட்டியில் ஊற்றி அடுப்பில் வைத்து, சிறுதீயாக எரிக்கவும். சாறு சுண்டி சடசட எனும் கொதி சத்தம் அடங்கும் வரை வைத்திருந்து பின் இறக்கி ஆறிய காலிபாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு, வேளைக்கு ஒரு கிராம் வீதம் காலை மாலை அருந்திவர மேற்கண்டநோய்

## நாளை சமுகமளிக்கவும்

(புலோலி)

சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலத்தின் சகல ஆசிரியர்களையும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெற்றோர்களையும் நாளை நண்பகல் 12மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திற்குச் சமுகமளிக்குமாறு அதிபர் எம். பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(வ-52)

## ஆன்மீகத் தலைவர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டு அங்கு சமாதானம் நிலவும் எனத் தான் நம்புவதாக திபத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## அடையாளம் காணப்பட்டார்

வவுனியாவில் குண்டு வெடிப்பில் பலியான 5வது நபர் மன்னார் திருக்கேதீஸ்வரத்தைச்சேர்ந்த ஐயாத்துரை நாகேந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உறவினர் வருகைக்காக சடலம் வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(வ)

## காயமடைந்தவர் மரணம்

கடந்த 24 ஆம் திகதி கோப்பாய் வடக்கில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த சச்சிதானந்தம் விக்னேஸ்வரன் (வயது 51) நேற்று முன்தினம் வைத்தியசாலையில் மரணமானார்.

(ந-2)

நாவாந்துறைப் படிப்பகம்

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ்

# கைதுசெய்யப்பட்ட அறுவர் சரீரப்பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பேர் தலா முப்பதாயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல யாழ் மாவட்ட மேலதிக நீதிவான் பி.சுப்பிரமணியம் அனுமதித்துள்ளார்.

பொன்னம்பலம் சுதாகரன் (புத்தூர்), அமிர்தநாதன் அருள்றொக்சன் (யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரராசா சுபாஸ்கரன் (கைதடி), பாக்கியராஜா விஷ்ணுகாந்தன் (யாழ்ப்பாணம்), குலேந்திரன் கௌரீதரன் (யாழ்ப்பாணம்), தியாகராஜா சதானந்தன் ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு மீண்டும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி நடைபெறும். (வ-7-12)

# தொடர்ந்தும் விளக்க மறியலில்

(புலோலி)

புலோலியைச் சேர்ந்த சிறுமி (வயது 14) ஒருவர் மீது பாலியல் வல்லுறவை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டமையால் அவர்கள் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பதில் மாவட்டநீதிபதிஏ.கே.நடராசாவின் உத்தரவின் பேரில் பதில்நீதிவான்பீ. குமாரசாமி முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

இராணுவச்சிப்பாய்களான எஸ்.பெரேரா, எஸ்.கன்னங்கரா ஆகியோரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர். (வ-7-52)

# 4-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு

(புலோலி)

80 வயது மூதாட்டி மீது பாலியல் வல்லுறவுகொண்ட சந்தேக நபரை எதிர் வரும் 4 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ஏ.கே நடராஜா உத்தரவிட்டுள்ளார்.

வரணியில் இருந்து இடம் பெயர்ந்து அல்வாயில் வசித்து வந்த 80 வயது மூதாட்டி கிட்டிணன் லட்சுமி மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்குச் சென்றபோது சைக்கிளில் வந்த அல்வாய் திடலைச் சேர்ந்த தங்கவேலு யோகநாதன் (வயது 35) என்பவர் அம்மூதாட்டியை பலவந்தமாக சைக்கிளில் ஏற்றிச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-52)

# ஆனந்தவீரசேகரா உட்பட மூன்று அதிகாரிகளுக்கும் பிணை மறுப்பு

(கொழும்பு)

வன்செயல்களின் போது காணாமல் போனோர் மற்றும் பல கொலைச் சம்பவங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மேஜர் ஜெனரல் ஆனந்தவீரசேகரா உட்பட மூன்று இராணுவ அதிகாரிகளையும் இம் மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி அனுராதபுர நீதிமன்ற நீதிவான் சுமுது பிறேமச்சந்திர உத்தரவிட்டுள்ளார்.

ஆனந்தவீரசேகரா சுகயீனம் காரணமாக நேற்றைய தினம் நீதி மன்றில் ஆஜர் செய்யப்படவில்லை.

சந்தேக நபர்களை பிணையில் செல்ல அவர்களின் வழக்கறிஞர்கள் அனுமதி கோரிய போதும் அதற்குரிய அனுமதியை வழங்க நீதிவான் மறுத்துள்ளார். (வ)

## பம்பலப்பிட்டி குண்டுச் சம்பவம் ஒருவர் விடுதலை

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் குண்டு வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவரில் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஏனைய நால்வரும் தொடர்ந்தும் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [வ]

# கைதடி இல்ல வயோதிபர்கள் மூளாய் வைத்தியசாலைக்கு?

(யாழ்ப்பாணம்)

கைதடி வயோதிபர் இல்லத்தில் இருந்து ஐ.சி.ஆர்.சி மூலம் மீட்கப்பட்ட வயோதிபர்களை மூளாய் வைத்தியசாலையில் வைத்துப் பராமரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இவ் ஏற்பாடுகளை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தா மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ந.7)

# பொது மன்னிப்பு வழங்க 24 மணிநேர அவகாசம்

(கொழும்)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களுக்கு மீண்டும் பொது மன்னிப்பு வழங்குவதற்கு 24 மணி நேர கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை சேவைக்கு செல்லாத இராணுவத்தினர் இந்த கால எல்லைக்குள் பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு அருகாமையில் உள்ள இராணுவ முகாம்களில் தமது வருகையை பதிவு செய்து கொள்ளலாம் என தேசிய பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [வ-7)

# முஸ்லிம் அரசியல் வாதிகளிடமிருந்து ஆயுதம் களையப்படவேண்டும்

## தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் சுமுகமான முறையில் நடைபெற வேண்டுமானால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை இராணுவத்தினர் மீளப்பெற வேண்டும் என வட்டுறகவிஜிததேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் போது புலிகளுக்கு அஞ்சியும் அரசியல் தலைவர்களின் தற்பாதுகாப்புக்காகவும் ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவ் அரசியல் தலைவர்களிடம் ஆயுதங்கள் இருந்தால் பொதுத் தேர்தல்கள் நேர்மையாகவும் நீதியாகவும் நடைபெறமாட்டாது என விஜிததேரர் தெரிவித்துள்ளார். (ந 7)

# ஐ. தே. கட்சி ஆதரிக்காது

(கொழும்பு)

அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியல் அமைப்புச் சீர் திருத்தத்தினை ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களிக்கும் என கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்: பௌத்த பீடங்களுடனும் ஏனைய தரப்புக்களுடனும் கலந்தாலோசிக்காமல் கொண்டுவரவிருக்கும் அரசியல் அமைப்புச் சீர் திருத்தத்தை நாம் நிராகரிப்பதுடன் அதனை ஆதரிக்கமாட்டோம் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

### வவுனியா...

அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று வவுனியா பிரயாணிகள் சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

இம் மறியற் போராட்டம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் சிங்கள மக்களுக்கும் படையினருக்கும் மட்டும் பஸ் சேவை நடைபெறுவதால் தமிழ் மக்கள் பலவிதமான போக்குவரத்துப் பிரச்சினைகளைஎதிர் நோக்க வேண்டியவர்களாக உள்ளனர். எனவே உடனடியாகபஸ் சேவையை தமிழ்ப்பிரதேசங்களுக்கு ஆரம்பிக்காவிட்டால் 7ஆம் திகதி மறியற்போராட்டத்தில் குதிப்போம் என்று தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் அடுத்தடுத்து குண்டுகள் வைத்து இரண்டு பஸ் வண்டிகள் தகர்க்கப்பட்டு எரிக்கப்பட்டமை தெரிந்ததே. (வ)

### தீர்வுத்திட்டத்தை...

கடந்த வாரம் பிரிட்டனில் தங்கி இருந்த போதே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் அங்குள்ள சிங்கள அமைப்புகளே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
கார்த்திக் கௌசல்யா
நடித்த
குபேரன்
காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(கி/652)

## ஈ. பி- டி. பி ஜனாதிபதி பேச்சு

அரசியல் அமைப்பு சீர் திருத்த யோசனைகள் தொடர்பாக நேற்று ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஜனாதிபதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### முஸ்லிம்...

லில் போட்டியிடுவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் கடந்த மாகாண சபைத் தேர்தலில் கனிசமான வாக்குகளை சம்மேளனம் பெற்றதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்: (வ)

### பௌத்த...

ரபுர பௌத்த பீடாதிபதி, மடிகே பஞ்சாசிக தேரர், ராமன் பௌத்த பீடாதிபதி தேவல்தினிய மடலங்கார தேரர் மல்வத்த பௌத்த பீடாதிபதி ரம்புகலவிபக்சி தேரர் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர்.

பிக்குமாரின் இவ் ஊர்வலம் மகரகம வைஜ்சிரயன விகாரையிலிருந்து பௌத்த பிக்குகள் பாதை யாத்திரையாக தேசிய இளைஞர் மன்றத்தை அடையவுள்ளனர் அங்கு மாபெரும் கூட்டம் என்றும் நடைபெறவுள்ளது. (வ)

### இம்மாதம் .:

ஒவ்றிங்கோ பயணிகள் கப்பல் சேவையையும் மேலதிக சேவைகளாக நடத்தவுள்ளன.

இதனால் கூடுதல் பயணிகளின்வெளியிடப் பிரயாணங்களில் காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்படலாம் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இக் கப்பல் சேவைகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழித்துணை வழங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### எமதுயோசனைகள்...

புனர்வாழ்வு அமைச்சருமான எம்.ஏச்.எம் அஸ்ரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 1997ம் ஆண்டு சீர் திருத்தத் திட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் திருத்தம் கொண்டு வந்தபோது அதனை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் அரசு இத்தீர்வுத்திட்டத்தை கொண்டு வரும் போது நாம் அதனை எதிர்ப்போம், என்று தெரிவித்தார். (வ)

### ஞானக்கோனுடன் ...

பூசியிருக்க முடியும் ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை.

உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை அரசு அவசர அவசரமாக இன்று கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளது அரசியல்தீர்வு குறித்து விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசுவதற்கு அரசாங்க சக்தி என்ற மட்டில் அவர்களுக்கு உரிமை உண்டு ஆனால் யூ.என்.பி. விடுதலைப் புலிகளுடன் பேச முற்பட்டால் அது எமக்கு எவ்வித பிரியோசனத்தையும் தரப்போவதில்லை.

விடுதலைப் புலிகளுடன் ஐ தே.கட்சி பேசுவதை அரசு விரும்பவில்லை இச்செய்திகள் பெரும்பாலும் திரித்தே அரசால் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது என்று கூறினார். (வ)

### சரீரப்...

ரப் பிணையில் செல்ல யாழ்: மேலதிக நீதிவான் பி. சுப்பிரமணியம்அனுமதித்துள்ளார்.

முப்பத்தேழு சந்தேக நபர்களில் 8பேர் ஏற்கனவே பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ 7-12)

### தென்னிலங்கையில் ...

சுமார் 15 ஆயிரம் யாத்திரிகர்கள் வருவார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தயாத்திரிகர்கள் அனைவரும்ஈரற்பெரியகுளம்இராணுவச்சோதனைச்சாவடியில்தம்மைப் பதிவு செய்து கொண்ட பின்னரே பிரயாணத்துக்கு அனுமதி வழங்கப்படுமெனவும் தடைசெய்யப்பட்ட பெருட்கள் எதுவும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடுமாதா உற்சவம் இம் மாதம் 6 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

### அரசியல்...

தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்திற்கு கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன இந்தியாவில் இருப்பதனாலும் கூட்டுறவுத்துறை அமைச்சர் டி.பி. விக்கிரமசிங்க சுகவீனமுற்று இருப்பதனாலும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

காணி விவசாய அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான டி. எம். ஜெயரத்தின சீனாவில் இருந்து நேற்றைய தினம் வந்தபோதிலும் அவர் கண்டியில் இருப்பதனாலும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (வ)

### இலங்கைச்...

வாகன உபயோகம், உட்பட சங்கத்திற்கு மேலதிக ஊழியர்களைச் சேர்த்துக் கொண்டமை மற்றும் சட்டவிரோத கூட்டங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு விசாரணைக்கு அழைப்பு விடுத்தபோதிலும் கடந்த 27 ஆம் திகதி சங்கச் செயலாளர் மாத்திரம் விசாரணைக்கு சமுகமளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-2

ஸ்ரீசெல்வா
[யாழ்ப்பாணம்]
கார்த்திக-கௌசல்யா
நடித்த
குபேரன்
10-30, 2-00 (ப.நே)
கி 685

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வேன்னாத்தெரு; யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.